
# தாயகம்



20/-

யூலை 1999

தேசிய கலை இலக்கியப் பேரவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயகம்

புதிய ஜனநாயகம்
புதிய வாழ்வு
புதிய நாகரிகம்

01 - 07 - 1999 இதழ் 38

# தேசியமும், தேசிய வெறியும்

தேசியம் என்ற போர்வையில் இன, மத, மொழி, வெறிகளைத் தூண்டி அரசியல் இலாபம் பெறுவது இலங்கை அரசியலுக்கு புதியதல்ல. இலங்கையின் அரசியல் வரலாறு என்பதே அதுதான். முன்பெல்லாம் தேர்தல் காலத்தில் மட்டும் தலை தூக்கும் இனவெறிக் கோஷங்கள் - இன்று பேரினவாத அரசியல், யுத்தமாக வெடித்து உச்சநிலை அடைந்துள்ளபோது பிறிதொரு பரிணாமத்தையும் பெற்றுள்ளது. இதன் வெளிப்பாடுதான் வீரவிதான, பயங்கரவாத எதிர்ப்பு முன்னணி என்பன.

மக்கள் தமது நாளாந்த பொருளாதார இடர்ப்பாடுகளுக்குள் சிக்கித் திணறும்போது இப்பேரின உணர்வுகளை மறந்து விடுவார்களோ என்பது மட்டுமல்ல. இடர்களுக்கான உண்மைக் காரணிகளை சிந்தித்து அறிய முற்பட்டு விடுவார்களோ என்ற அச்சமும் இடையிடையே எழும் இவ் இனவாத வெறியூட்டல்களுக்கு காரணமாகும். நீண்டு தொடரும் யுத்தத்துக்கெதிராக மக்களிடையே எழும் எதிர்ப்புணர்வை மழுங்கடிப்பதும், அரசியற் தீர்வை புறந்தள்ளி பேரினவாத யுத்தத்தை முன்னெடுக்க தூண்டுவதும் இதன் இலக்காகும்.

ஒரு தேசிய இனம் அல்லது பல்தேசிய இனக் குழுமங்கள் தத்தமது மொழி, மத, பண்பாட்டுக் கூறுகளையும், சுதந்திரம், பாதுகாப்பு ஆட்சி உரிமை போன்றவற்றையும் பேணிக் கொள்வதற்காக தேசியம் என்ற கருத்தியலை உருவாக்குகிறது. தேசியம் என்பது பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான கருத்தியல் அல்ல. அதன் உருவாக்கத்திலும் வர்க்கச் சார்பு உண்டு.

தமது இனத்தைச் சார்ந்த மக்களையே சமத்துவமாக நடத்தாது, சுரண்டல் சமூக அமைப்பை ஏற்றுக் கொள்ளும் முதலாளித்துவ தேசியம், தனது சுரண்டும் வர்க்க நலன்களை மறைப்பதற்கான வெற்றுக் கோஷமாக இதனைப் பாவிப்பதுடன் ஏனைய இனங்களையும் ஒடுக்கிச் சுரண்டுவதற்கான தேசிய வெறியாகவும் இதனை மாற்றிக் கொள்கிறது.

தமது தேசிய வெறிக்கு துணையாக துட்டகைமுனுவையும் எல்லாளனையும் துணைக்கு இழுக்கும் போது அவர்களது அரச போக வாழ்வுக்காக கட்டிய கோவணத்துடனேயே காலமெல்லாம் உழைத்து உருக் குலைந்து போனவர்களையும், அவர்களது மணி முடிகளை சரிந்து போகாமல் காப்பதற்காக பெரும் எண்ணிக்கையில் உயிர் கொடுத்த — அடிமைப் பரம்பரைகள் — உழைக்கும் மக்களின் வரலாற்றையும் இவர்கள் மறைக்க முற்படுகின்றனர்.

தமது மொழி மத பண்பாட்டு விழுமியங்களில் கூட அக்கறையற்ற இப்போலித் தேசியம். தனது சொந்த இலாபங்களுக்காக தனது தேசத்தையே ஏகாதிபத்திய பல்தேசிய இனக் கம்பனிகளுக்கு அகலத் திறந்து விடுகிறது. ஏகாதிபத்திய நச்சுக் கலாச்சார பரம்பலால் ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவுகள் பற்றியும் இவை அக்கறை கொள்வதில்லை.

இதற்குப் மாறாக உழைக்கும் மக்கள் தலைமையிலான தேசியம் தமது இனத்து மக்களை சமத்துவமாக நடத்துவதுடன் ஏனைய இனங்களின் உரிமைகளுக்கும் உயர்ந்த மதிப்பை அளிக்கிறது. தமது பண்பாட்டின் உயர் விழுமியங்களைப் பேணிப் பாதுகாத்து உலகப் பண்பாட்டுடன் ஒன்றிணைத்து காலத்துக்கு ஏற்ப ஒரு புதிய பண்பாட்டை புதிய வாழ்வை புதிய நாகரிகத்தை உருவாக்க துணை புரிகிறது. இத்தகைய தேசியம் உலகின் சில நாடுகளில் இன்றும் பேணப்பட்டு வருகின்றது.

எனவே தேசிய வெறியூட்டல்களுக்கு எதிராக மேற்கூறிய உழைக்கும் மக்கள் தலைமையிலான தேசியத்தை நாம் பலம் பெறச் செய்ய வேண்டும். தேக்கங்கள் - திருப்பங்கள் இருந்த போதும் சுதந்திரத்தின் எல்லைகளை விரிவாக்கும் மனித குலத்தின் பேரவா - வரலாற்றுப்போக்கு - நின்றுவிடுவதில்லை. எந்தப் போர்வைக்குள் மூடிவைத்தும் அடிமைத்தனங்களை நீண்டகாலம் எவரும் அடைகாக்க முடியாது. (ஆர் - குழு)



# கண்ணைக் கட்டி . . .

● சேயோன்

— 'கண்ணைக் கட்டிக்
காட்டில் விட்டதேன்?'
அண்ணலே, அலைந்து குலைந்தேன்
இப்படிக் கூவி இரங்கி
அழுவதால், நெஞ்சின் பாரம்
நெகிழ்ந்து கரைவதும், கரைந்தது
வடிந்து காய்ந்து போவதும்,
இலேசாய் விடுவதும்—
என்னவோ, உண்மை தான்.

— ஆனால், அண்ணல் ஆர்?
— அண்ணல் ஆர்? அண்ணலார்....
— காடெது? வீடெது? கண் எது?
கட்டு எது?
— காடு நான் நாடு.
கட்டும் அது தான்
வீடென்பதோ விடுதலை ஆகும்
விட்டு விடுதலை ஆகுக;
சிட்டுக் குருவியைப் போலே
கிளம்பு.

— சாமீ. உங்கள் தத்துவம்
மெய்போல் தோற்றுதல் உண்மை தான்...
— அப்புறம்? சொல்க உன் கருத்தை.
— கண்ணைக் கட்டிக் காட்டில் விடுதல்
எண்ணம் ஒன்றை இயற்றி
உணர்த்தும் உத்தியே அன்றி
உண்மை அல்லவே!
தந்திரம் எல்லாம்
சாத்திரம் ஆகுமோ?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உவமையை உண்மையாய் மயங்கி
காடும் வீடும் கலந்து
தத்துவ விளக்கம் தருவது
சரியோ?

— புத்தியால்
எதையும் நீ பொத்தல் ஆக்குவாய்.
— சத்திய நெருப்பிலே
சருகு கூளங்கள் எரிந்து
சாம்பல் ஆகினால்... சாம்பலைக்
கிளறி என்ன புண்ணியம்?
உண்மை - பொய் பற்றிய உணர்வுகள்
முற்றாய் நீங்கா நிலையில்
ஓவியம் இயற்றுவோம்
அழியா விழிப்புடன் ஆக்குவம்
கலைகளே.
— ஆக்குவம் கலைகளே.

பலஸ்தீனக் கவிதை

## நியூயோக்கிற்கு ஒரு சவக்குழி

நியூயோர்க், எனது
நாட்டில் இடைவழியும் கட்டிலும் கதிரையும் தலையும்
உனக்குரியன, இரவும் பகலும் மெக்காவின் கல்லும்
திGரிஸின் நீரும் யாவுமே விற்பனைக்குரியன. நான்
பிரகடனம் செய்கிறேன்: இருந்தும் நீ பலஸ்தீனத்திலும்
ஹனோயிலும் வடக்கிலும் தெற்கிலும், கிழக்கிலும்
மேற்கிலும் நெருப்பையன்றி வரலாறே அற்றவர்கட்கெதிராக
முனைகிறாய், போட்டியிடுகிறாய்;
நான் சொல்கிறேன்; பெரிய யோவானின் காலந்தொட்டு
நாமொவ்வொருவரும் தம் அறுந்த தலையை ஒரு தட்டில்
வைத்துச் சுமந்து இரண்டாவது வருகைக்காகக்
காத்திருக்கிறோம்.*

நன்றி : பாலை - அடோனிஸ் கவிதைகள்



## விதைத்த விதைப்புக்கள்

விதைத்த விதைப்புகள்
வீணாய்ப் போகும்
விதமாய் நடப்புகள்
முளைத்தன புதிதாய்
மூலைகள் எங்கும்
மினி சினிமாக்கள்
தழைத்தது மேலை
பண்பாடிங்கு
பெருகின பாலியல் பிறழ்வுகள்.
இழிந்த கசிப்பு
அழிந்து போகாது
அரங்கில் வந்தது
தூங்கிய சாதியம்
தூக்கம் கலைந்து
மெல்ல எழுந்தது
சீதனச் சந்தையும்
சரிந்திடா துயர்ந்து
சூடு பிடித்தது
உடமையும் பணமும்
இரத்த உறவையே
இரு கூறாக்கின.
சமத்துவ உணர்வுகள்
சரிந்தது மனங்களில்
மடிந்தது மானுட அன்பு
ஒடுக்கு முறைகள்
உயர்ந்து மலைபோல்
மிதித்தது மானுடர் தலையை
முளைத்தன புதிதாய்
முளைகள் எங்கும்
முள்ளுக் களைகளாய்

— அழ. பகிதரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவகக்கதை

# நரியின் ஒலி பெருக்கி

நரிக்கு அடிக்கடி மிகவும் வியப்புக்குரிய யோசனைகள், உருவாகும். அதை நரி செயற்படுத்தும் முறை மக்களை திகைப்பூட்ட வைக்கும்.

முன்பு ஒரு நரி. தனது வாயில் ஒரு ஒலி பெருக்கி ஊதுகுழலைக் கட்டிக் கொண்டு, தனது வாலில் ஒரு நெருப்புத் திரியைப் பிணைத்துக் கொண்டு வந்தது, அவற்றைத் தன்னுடலில் நன்கு பிணைத்துக் கொண்ட பிறகு, திறந்த வெளிப்பகுதிக்கு வந்த நரி, 'நெருப்புக்கு எதிராக பாதுகாப்பாயிருங்கள். எதிரிகள், புரட்சியாளர்கள், நெருப்பு மூட்டுவதை அனுமதிக்காதீர்கள்' என்று தனது ஒலி பெருக்கியில் கோஷமிட்ட வண்ணம். அங்கு இங்கும் ஓடித் திரிந்தது. அதேவேளை அதன் வாலில் பிணைக்கப் பட்டிருந்த தீப்பந்தம் எல்லாப் பொருட்களுக்கும் தீ மூட்டலாயிற்று.

இந்தப் பெரிய ஏமாற்று வித்தை அருகிலுள்ள, தூரத்திலுள்ள கிராமத்தவர் அனைவரையும் நரியின் பால் இழுத்தது. அவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர்.

தனது செயற்பாட்டின் வெற்றியில் மகிழ்ச்சியுற்ற, நரி, தனது சிந்தனை அலையினால் உருவாக்கப்பட்ட திட்டத்தை மக்களுக்கு விபரித்துக் கூறியது.

'எனது நாட்டின் இனிய சகோதரர்களே! என்னுடைய இந்த விளையாட்டுக்குப் பெயர் என்னவென்றால்' எங்கெங்கு நெருப்பை அணையுங்கள் என்று கோஷமிடப் படுகின்றதோ, அங்கிருந்து தான் நெருப்பு பரவிடப்படுகின்றது'

பெங்கி பெங் — தமிழில்; சுரேந்திரன்



# திருவிழா

O சீலன்

'டேய் சுகிர் கெதியா நடவடா, இண்டைக்கு பூங்காவனம், கடைசித் திருவிழா,'

'ஓமடா சேந்தன்ரை திருவிழா வெண்டாலும் எல்லாரும் சேந்து வடிவாச் செய்ய வேணும்.'

'ரமேஷ் மண்டாக் குளத்துக்கை தாமரைப்பூ நிறையப் பிடுங்கியாறண்டவன்.'

'டேய் மாலா வீட்டிலை பெரிய சவுக்கு நிக்குது, பெரிய கொப்பா நாலை வெட்டிக் கட்டி பலப்பும் பூட்டிவிட்டா எப்பிடி இருக்கும்.'

'போடா நத்தாருக்குத்தான் அப்படிச் சோடிக்கிறது. இது சைவக் கோவில் திருவிழா வெல்லே.'

'பூங்காவனம் எண்டா முருகன்ரை கலியாண வீடுதானே எப்பிடிச் சோடிச்சாலும் வடிவா இருந்தா சரிதானே, அதுசரி ஆருக்கு வள்ளியம்மனுக்கோ தெய்வானை அம்மனுக்கோ கல்யாணம்.'

'உதுகளைப் பற்றி எனக்குத் தெரியாது'

'சரி அதைவிடு; நான் புத்தகத்தை வைச்சிட்டு ஓடியாறன் நீயும் கெதியா வா'

'வேண்டாம். புத்தகத்தை சபேசன் வீட்டை வைக்கலாம், முதல் கோவிலடிக்குப் போவம். இண்டைக்கு வேளைக்கே எல்லாரும் வாற எண்டு சொன்னவங்கள்.'

சுகிரும் சுதாகரும் உரையாடிக் கொண்டே வேகமாக கோவிலை நோக்கி நடந்தனர்.

'ஆரோ வாழைக் குட்டியள் கொண்டு வந்திருக்கிறார்கள்'

தொலைவில் கோவிலடிக்கு முன்னால் கிடந்த வாழைக் குட்டிகளைக் கண்டதும் மகிழ்ச்சியுடன் சுகிர் சொன்னான்.

'சுகிர் இதென்னடா கோயில்' ———

தொலைவில் தென்னங் குருத்து மாங்கொப்புகளைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவிக் கொண்டு வந்த சிறுவர்களை திரும்பிப் பார்த்த சுகிர். சுகாரின் அவலக் குரலால் அதிர்ச்சியடைந்து கோவிலை திரும்பிப் பார்த்தான்.

இருவரும் ஒருகணம் விறைத்து நின்றனர் அவர்களது ஆவல்கள் எதிர்பார்ப்புகள் எல்லாம் உடைந்து நொருங்க கோவில் முகப்பு முதல், கொடித்கம்பம், மூலஸ்தானம் எல்லாமே சரிந்து போய் இருந்தது.

ஊரி உள்ள கோவில்களிலெல்லாம் கொடியேற்றி திருவிழாக்கள் தொடங்கி நடந்து முடிந்திருந்தால் அந்த அருட்டுணர்வில் அவ்வூர்ச் சிறுவர்களும் கோவில் கட்டி விளையாட விரும்பினர்.

கிளாக்கர் விட்டின் பின்புறமுள்ள அந்த நீண்ட வளவின் நடுவே உயர்ந்து வளர்ந்திருந்த அந்த வேப்ப மாத்தின் கீழ் அயலில் உள்ள பெண்கள் தம் ஓய்வு நேரங்களில் ஒன்று கூடி அமர்ந்து தலைவரிப் பேன் எடுப்பதுடன் காது குடும்ப நிலைமைகள் ஊர் நிலைமைகள் பற்றி உரையாடுவர் 'ஊராங்கு வேளை' போன்ற விசேட நாட்களில் அயலில் உள்ள ஆண்களும் கூடி 'காட்ஸ்' விளையாடுவர் சிறுவர்களும் அங்கு கூடி போளை அடி, கிட்டியடி, கிளிக்கோடு என்று தத்தமது பருவத்துக்கேற்ப விளையாடுவர் எல்லை வேலிகளை எல்லோரும் இறுக்கமாக அடைத்துக் கொண்டாலும் அங்கு வருவதற்காக பொட்டுக்கள் விடப்பட்டிருந்தன.

அந்த வேப்ப மரத்தின் கிழ்த்தான் அயலிலுள்ள சிறுவர் சிறுமியரின் கூட்டுழைப்பால் நாலைந்து நாட்களில் ஒரு கோவில் எழுந்தது. களிமண்ணால் சிறிய சுவர் எழுப்பி பலிபீடம், கொடித்தம்பம், மூலஸ்தானம் எல்லாமே அமைந்த அக்கோவிலின் அழகிய தோற்றத்தில் அச்சிறுவர்களின் கைவண்ணத்தைக் கண்டு பெரியவர்கள் அவர்களை மெச்சி மகிழ்ந்தனர். நல்லூர் திருவிழாவின் போது அடம்பிடித்து வாங்கிய செம்பாலான வேல் மூலஸ்தானத்திலும், ஈயத்தால் உருக்கிவார்க்கப்பட்ட முருகன், தெய்வானை, வள்ளி, அம்மன் சிலைகள் வசந்த மண்டபத்திலும் வைக்கப்பட்டிருந்தன.

பத்து நாட்களாக தொடர்ந்து பாடசாலை விட்டு வந்ததும் நடத்தப்படும் அக்கோவில் திருவிழாக்களில் சிறுவர் சிறுமியர் மட்டுமல்ல அவர்களின் தாய் தந்தையரும் அயலிலுள்ளவர்களும கலந்து கொண்டனர்.

அலங்காரங்கள், ஆடல், பாடல் தேவாரம் தீபாராதனையுடன் ஆரம்பமாகும் திருவிழா அந்த வேப்பமரத்தைச் சுற்றி சுவாமி வீதிவலம் வருவதுடன் முடிவடையும். முடிவில் வீபூதி, சந்தனம், புக்கை, மோதகம், வடை, வாழைப்பழம் என பிரசாதங்களும் வழங்கப்பட்டன.





நாளுக்கு நாள் புதிய நிகழ்ச்சிகளுடன் சிறப்பாக நடந்த அந்த திருவிழாக்களின் இறுதிநாளான அன்று ரமேசுடன் படிக்கும் பள்ளி மாணவர் இருவர் மிருதங்க கச்சேரி செய்யவும் ஒப்புக்கொண்டிருந்தனர். பக்கத்து வீட்டு வாத்தியாரின் இரு சிறுமிகளின் பரதநாட்டியம் இரண்டாவது முறையாக நிகழ இருந்தது.

மின்விளக்குகள் பூட்டி அலங்காரங்களுடன் சிறப்பாகச் செய்ய வேண்டுமென்ற ஆவலுடன் அங்கு அவர்கள் கூடிய போது தான் அந்த ஆலயமே சிதைக் கப்பட்டிருந்தது.

'டேய் சுகிர் ஆற்றா இதைச் செய்திருப்பாங்கள்'

அடுத்த வீட்டின் வேலிப் பொட்டுக்கூடாக ஒரு சிறுவனின் நடமாட்டம் தெரிய சுதா அங்கு ஓடினான்.

'டேய் குமார் ஆற்றா இந்தக் கோவிலைச் குழப்பினது'

'ஐயோ இதென்ன இது எனக்குத் தெரியாது. நான் இப்பதான் பள்ளிக்கூடத்தாலே வாறன்'

பொட்டுக்கூடாக கோவிலைப் பூந்து பார்த்து விட்டு ஆச்சரியமும் துயரும் வெளிப்படக் கூறினான் குமார்.

'அப்ப இதாற்றை வேலையா இருக்கும் டேய் சாமி அம்மாவுக்கு மூளை சுகமில்லைத் தானே. அவதான் செய்தாவோ!

'சீ ... அவ பாவம், மரங்களைக் கண்டாலே தொட்டுக் கும்பிடுறவ, ஒவ்வொரு நாளும் ஒழுங்கா வந்து வீபூதியும் அப்பிக் கொண்டு கொண்டையிலை பூவும் செருகிக் கொண்டு நிக்கிறவ'

'ஓ ... தேரிலண்டு எல்லாரும் சிரிச்சுக் கொண்டு சும்மா பின்னாலை வர அவதான் அடியழிச்சவ அப்ப வேறையார் செய்திருப்பாங்கள்'

'சிவா மாமாவுக்கு கடவுள் நம்பிக்கை இல்லை'

'போடா விசரா... அவரை ஏன் இதுக்கை இழுக்கிறா அவருக்கு நம்பிக்கை இல்லை எண்டாலும் எங்களைச் கும்பிடாதை எண்டு சொல்லுறவரே தாங்களும் இப்பிடித்தானாம் சின்னவயதிலை கோவில் கட்டி விளையாடுற எண்டு சொன்னவர்'

'ஓமடா சுகிர் அண்டைக்கு 'இஞ்சை நம்பிக்கை இல்லாதவரும் வந்து நிற்கிறார் எண்டு அப்பா பகிடி பண்ண இதைத் தானே நீங்களும் கோயிலிலை செய்யிறியள் எண்டு சொன்னவர்.'

கோவிலடியில் கூட்டம் கூடி விட்டது. தமது ஆத்திரங்களை சிலர் வார்த்தைகளில் திட்டித்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்த்தனர்: அவர்களது புலனாய்வுக்குள் செய்தது யார் என்பது இன்னும் அகப்படவில்லை.

ரகுவும் விசியும் கார் பற்றியை சையிக்கிளில் வைத்து தள்ளிக் கொண்டு வருகின்றனர். அவர்களிடம் ஓடிச் சென்று நடந்ததைச் சொல்கிறான் சுதா. சயிக்கிளை நிறுத்தி விட்டு ஏமாற்றத்தால் ஆத்திரம் மேலிட கோவிலைப் பார்க்கிறான்.

'நான் நேற்றே யோசிச்சனான் ஏதோ நடக்கப்போகுதெண்டு'

'டேய் அப்ப உனக்கு ஆர் செய்ததெண்டு தெரியுமே'

'இது உவன் சுருளி சபேசன்ரை வேலையாத்தான் இருக்கும்'

'உதார் தம்பி ரகுவே உமக்கு வடிவாத் தெரியுமே ஆர் செய்ததெண்டு'

'ஓம் அவன்தான் நேற்றைக்கு ஆத்திரப்பட்டு கதைச்சவன் அவனுக்கு தன்ரை திருவிழா வடிவா நட(த்)கேல்லை எண்டு அழல்'

'அதுதான் ஆளை இன்னும் இஞ்சை காணேல்ல'

'சுதாவின்ரை சப்பறத் திருவிழா பரத நாட்டியம் எல்லாத்தோடையும் வடிவா நடந்தது அவனுக்கு பிடிக்கேல்லை'

'அதுக்கு உந்த வேலையே செய்யிறது எத்தினை பிள்ளையள் ஏமாந்து போச்சு'

'என்ன துணிச்சலிலை இதைச் செய்தவன் தங்கடை வளவுக்கை தான் கோவில் இருக்கெண்டதடிப்போ'

'இண்டைக்கு வரட்டும் அவருக்கு இழுத்துப் போட்டு நாலு குடுக்காமை விடுறேல்ல'

துரையன் ஆத்திரத்தோடு கூறினான்

'இஞ்சை ஆர் செய்ததெண்டு வடிவாத் தெரியாமை கண்டபடி கதையாதையுங்கோ'

'அது தானே அவன்தான் செய்ததெண்டு ஆராவது கண்ணாலை கண்டனீங்களே'

'இஞ்ச இது பிழையான நாயம் கண்காணாட்டி ஆரும் எதுகும் செய்து போட்டு போகலாமே' என்ன பேக்கதை கதைக்கிறியள்.

'பின்னை என்ன அவன் பொறாமைப்பட்டுச் செய்ததெண்டால் அவன் மற்றவையை போலை வழியில்லாதவனே.'

'அதுதானே ஊர்க்கோயிலெல்லாம் உச்சமான திருவிழா அவங்கடை தானே'

'எட கோவில் விசயத்தை கதைக்க வெளிக்கிட்டா இவர் என்ன வசதியுள்ளவை வசதியில்லாதவை கதைக்கிறார் வரேக்கை எல்லாரும் கட்டிக் கொண்டே வந்தவை — இஞ்சை — மற்றவையை மட்டந்தட்டுற கதை கதைச்சா வீண் வில்லங்கம் வரும் ... ஓ —

'துரையண்ணை ஆத்திரப்படாதையுங்கோ, சின்னப் பிள்ளையளின்ரை விளையாட்டை ஏன் பெரிசுபடுத்திறியள். பெடியள் போட்டாங்கள் நேர கேட்டால் எல்லாம் தெரியும் தானே'

சிவா வேலைக்காக காத்திருக்கும் ஒரு பட்டதாரி இளைஞன் அவனது வார்த்தைகளுடன் சிறிது நிதானமடைந்த அவர்களது பார்வை கிளாக்கர் வீட்டின் பின்புறமாக திரும்பியது.

அப்பொழுது தான் வேலை முடிந்து வந்து கிளாக்கர் உடைகளை மாற்றாமலே வேலிக் கதியாலில் இழுத்து முறித்த பூவரசங் கம்பால் அவரது இளைய மகன் சபேசனின் முதுகிலும் கால்களிலும் மாறி மாறி அடித்தபடி கோவிலடியை நோக்கி இழுத்து வருகிறார்.

இதுவரை அவன்மேல் ஆத்திரமடைந்த சிறுவர்கள் அக்காட்சியைக் கண்டதும் அவன் மீது இரக்க முற்றவர்களாக செய்வதறியாது திகைத்து நின்றனர்.

'அண்ணை இதென்ன — இது — விடுங்கோ அவனை — படிச்ச நீங்களே இப்பிடிச் செய்தா — சும்மா விளையாட்டுக்கு கட்டின கோவில் தானே'

'விளையாட்டுக்கு கட்டினதெண்டாலும் கடவுளோடை விளையாடக் கூடாது.'

கிளாக்கருக்கு ஆவேசம் இன்னும் அடங்கவில்லை.

'சரியாச் சொன்னியள் — இது கோயிலை இடிக்கிற மாதிரித் தானே உது உவருக்கு விளங்காது'

'டேய் சபேசன்'

கிளாக்கர் மீண்டும் சபேசனை அடிக்க ஓடுகிறார். சிவா அவரைத் தடுத்து நிறுத்திக் கொண்டே.

'ஓ... நீங்கள் அங்கையே வாறியள் விளையாட்டெண்டாலும் இடிபட்டது உங்கடை கோயிலெல்லே... ஆற்றையேன் கோயில் எண்டால் நீங்களும் சேந்து கல்லெடுப்பியள்,

'தம்பி சிவா நம்பிக்கையில்லாத உமக்கு கோயில் விசயத்திலை கதைக்க உரிமை இல்லை'

கோயில் விசயத்திலை நான் கதைக்க வரேல்லை, குழந்தையளின்ரை விசயத்திலை தான் கதைக்க வந்த நான். எங்களிட்டை உள்ளதுகள் தான் இதுகளிட்டையும் வெளிப்படுது விடுங்கோ அண்ணை கம்பை. நான் போறன்"

ஊர்க் கோவில் நிர்வாகசபைத் தலைவரின் பேச்சு சிவாவை ஆத்திரப்படுகிறது — கிளாக்கரின் கையிலிருந்து தடியை பறித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு அந்தக் கூட்டத்தை விட்டு அவன் வெளியேறுகிறான்:

இதுவரை தங்களது விளையாட்டால் ஏற்படவிருந்த விபரீதங்களை தடுக்க முனைந்த சிவாவின் வெளியேற்றத்தால் அச்சிறுவர்களது முகங்கள் சுருங்கின. அங்கிருந்த பெரியவர்கள் பலரும் தமக்குள் புறுபுறுத்துக் கொண்டனர். துரையன் ஆத்திரத்துடன் மீண்டும் கதைப்பதற்கு ஆயத்தமானான். அதற்கிடையில் சிறிது தூரம் சென்ற சிவா திரும்பி நின்றான்.

'சாமியை மட்டும் நாங்கள் கும்பிட்டா சண்டை வராது சாமியை சாட்டா வைச்சு நாங்கள் எங்கடை சுயநலங்களையும், அதிகாரங்களையும் தான் கும்பிடுறம்'

கையிலிருந்த தடியை முறித்து எறிந்து விட்டு அவன் சொல்லிச் சென்ற வார்த்தைகள் ஏதோ ஒரு வகையில் அவர்களைப் பாதித்திருக்க வேண்டும்: அவர்கள் அனைவரும் அவன் மறையும் வரை அவனைப் பார்த்தபடி நின்றனர்.


## தாயகம் 25 - வது ஆண்டு மலருக்கு

படைப்பாளிகளிடமிருந்து —

சிறுகதைகள்

கவிதைகள்

கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**அடுத்த இதழிலிருந்து**

கலை இலக்கிய, சமூக விஞ்ஞான அறிவியற் கேள்விகளுக்கு 'ஞானியர் பதில்' தருகிறார்.

வாசகர் கடிதங்களும் வரவேற்கப்படுகின்றன.

தொடர்பு முகவரி:

ஆசிரியர், 'தாயகம்',
வசந்தம் புத்தக நிலையம்,
405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(ஆ-ர் குழு)




# எதிர்ப்பு இலக்கியமும் எசமானர்களும்

● சி. சிவசேகரம்

## அறிமுகம்

இலக்கியம் என்றுமே சமுதாயஞ் சார்ந்துதான் உருவாகி விரிவடைந்துள்ளது. அதன் சமுதாய உள்ளடக்கமும வர்க்கச் சார்பும் எப்போதும் வெளிவெளியாகத் தெரிய அவசியமில்லை. இலக்கியம் உருவாகிற காலமும் அதன் உடனடியான சமூகத் தேவையும் அதன் சமூக - அரசியற் தன்மையின வெளிப்பாட்டை நிர்ணயிக்கின்றன. ஒரு படைப்பாளியின படைப்புக்களில் அதிக கால வேறுபாடில்லாமலுங்கூட, நாம வேறுபட்ட கருத்து வெளிப்பாட்டுத் தன்மைகளைக் காணலாம். படைப்பினூடு வெளியாகும் கருத்து வலிந்து முன்வைக்கப்படுகிறதா இல்லையா என்பது ஒரு புறமிருக்க, ஒருவரது சமூக - அரசியற் சித்தாந்தம் அவரை அறியாமலேயே அவரது எழுததினுட் புகுகிறது. தமது நிசமான எண்ணங்களை மூடி மறைந்து எழுதுகிற படைப்பாளிகள் கூட அவர்களது அகமனதால இடறிவிடப்படுகின்றனர். இங்கே ஒரு படைப்பின் வாசிப்பின குறைபாடுகளையும் நாம் மனதிற் கொள்ள வேண்டும் சில சமயங்களில் குறிப்பிட்ட விதமான அகச்சார்பான வாசிப்புககள் எழுததுககள் மீது திணிக்கப்படுவதும் உண்டு. பாரதி மீது சுமத்தப்படும பார்ப்பனிய, ஆணாதிக்க அடையாளங்கள் இதற்கான உதாரணங்களில் உள்ளடங்குவன. இவ்வாறே எதிர்ப்பு இலக்கியங்கள் பலவற்றை அவற்றின் காலத்துக்குரிய முக்கியத்தை மறுக்கும் விதமாகத் திரித்து வாசிக்கும் முயற்சிகளும் இன்று பரவலாகக் காணப்படுகின்றன:

பல பழம் இலக்கியங்களின் கிளர்ச்சிக் குரல்கள் நீண்ட காலமாகத் தவறான வாசிப்புக்குள்ளாக்கப்பட்டிருந்தன. இவற்றின் எதிர்ப்பிலக்கியத் தன்மையை அறியவும் அடையாளங் காட்டவும் மாக்ஸியத் திறனாய்வுமுறை ஒரு பயனுள்ள கருவியாக இருந்தது: இன்று எல்லாவற்றையும் அர்த்தமற்றவையாகக் காணு

கிற ஒரு புதிய மாயாவாதமும் ஐக்கியப்பட வேண்டியவர்களை எல்லாம் பிளவுபடுத்தும் முயற்சிகளும் பின் நவீனத்துவம் என்ற கோட்பாட்டைத் தமக்கான ஒரு கருவியாக்கியுள்ளன. எசமான வர்க்கம் எதைச் செய்ய முயன்று தோல்வி கண்டதோ அதையே புதுமை, நவீனத்துவம், கிளர்ச்சி என்ற பேர்களிற் சிலர் இன்று செய்ய முயல்கின்றனர். இச் சூழலில் நாம் இலக்கியத்தின் எதிர்ப்புக்குரல்கள் எவ்வாறு செயற்பட்டு வந்துள்ளன என்பதையும் அவற்றை எசமான வர்க்கம் எவ்வாறு கையாண்டுள்ளது என்பதையும் பற்றிக் கவனிப்பதற்கான ஒரு தேவை இருக்கிறது.

எந்த ஒரு படைப்பையும் எடுத்த எடுப்பிலேயே ஏதாவது ஒரு முத்திரை குத்தி ஒதுக்குகிற ஒரு மரபும் இல்லாத கருத்துக்களையெல்லாம் வலிந்து திணித்து வாசிக்கிற ஒரு மரபும் நம்மிடையே வளர்ந்து வருகின்றன. இது திறனாய்வுக் குறைபாடு. இது நமக்கு ஏற்றதல்ல. மரபின் இலக்கியங்களின் ஆய்வில் ஒரு வரலாற்றுப் பார்வை நமக்குத் தேவை. அன்றைய கிளர்ச்சிக் குரல்கள் எவ்வாறு ஒலித்தன என்று அறிய, இன்றைய கிளர்ச்சிக் குரல்களுடனான மேலோட்டமான ஒப்பீடு உதவாது. அன்றைய எதிர்ப்பிலக்கியம் எப்படிச் செயற்பட்டது என்ற அறிவு, அதை அப்படியே இன்றைய எதிர்ப்பிலக்கியமாக்கும் காரியத்திற்கானதாக இருக்க முடியாது. எதிர்ப்பிலக்கியங்கள் ஏன், எவ்வாறு தமக்குரிய வடிவங்களுள் அமைந்தன என்ற அறிவு சமுதாய மாற்றத்திற்காகச் செயற்படுகிற திறனாய்வாளர்கட்கும் படைப்பாளிகட்கும் தேவையானவை. அதை விட முக்கியமாக, எந்த எசமான வர்க்கத்திற்கு எதிராக எதிர்ப்பிலக்கியம் குரல் கொடுத்ததோ, அதே எசமான வர்க்கம் அந்த எதிர்ப்புக் குரலை எவ்வாறு தனக்கு வசதியான விதமாக மழுங்கடித்தும் தனக்கு வாய்ப்பான விதமாக மறு வார்ப்புக்கும் மறு வாசிப்புக்கும் உட்படுத்தியும் தனதாக்கி இருக்கிறது எனவும் நாம் கவனிக்க வேண்டும். இதிலிருந்து நாம் கற்க வேண்டிய பாடங்கள் என்ன என்றும் சிந்திக்க வேண்டும்.

வரலாறு புரட்சிகர சக்திகளின் தரப்பில் தான் உள்ளது. அதனால் புரட்சிகர சக்திகள் கைகளைக் கட்டிக் கொண்டிருக்க முடியாது. நாம் எதிரியிடமிருந்து கற்க மறுக்கலாம். ஆயினும் எதிரி நம்மிடமிருந்து கற்கிறான், எப்படியும் தன்னுடைய ஆதிக்கத்தின் ஆயுளை நீடிக்கும் நிர்ப்பந்தம் எதிரிக்கு. வரலாற்றினின்று நாம் கற்க மறுக்கும் போது, எதிரியையே நாம் வலிமைப்படுத்துகிறோம். வர்க்கப் போராட்டத்தின் இரு தரப்புப் பாசறைகளிலும் கலை இலக்கியங்கள் முக்கியமான ஆயுதங்களாகவே உள்ளன. ஒடுக்கப்பட்ட மக்கள்சார்பான ஆயுதங்கள் எவ்வாறு



பறிக்கப்படுகின்றன, சிதைக்கப்படுகின்றன, எதிரியால் தனதாக்கப்படுகின்றன என்பது பற்றிய ஒரு ஆய்வுக்கான அறிமுகமாக இக் கட்டுரையை எழுத விரும்புகிறேன். இவ்விடயம் மேலும் விரிவாக்கப்பட வேண்டிய ஒன்று. இதில் உள்ள குறைபாடுகள் யாவும் அடையாளங்காணப்பட்டு, அதன் மூலமும் செம்மையான ஆய்வுகள் விருத்தி பெறவேண்டும் என்பது என் ஆவல்.

## 1. எதிர்ப்பின் குரலாக மதம்

மனித சமுதாயத்தின் அறியப்பட்ட வரலாற்றுக் காலத்தின் பெரும் பகுதி மதங்களின் தொடர்பானது. ஆதி மனித வாழ்வுக்கும் இயற்கைக்குமிடையிலான நட்பும் பகைமையும் கலந்த உறவும் இயற்கை பற்றியபுரிதலும் கடவுள் நம்பிக்கையின் தோற்றுவாய்கள். சமுதாயங்களின் ஒருங்கிணைவில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் வகுத்தபங்கை மதம் படிப்படியாகத் தனதாக்கிக் கொண்டது. சமுதாயங்களின் ஒருங்கிணைவு ஏற்றத்தாழ்வான சமுதாய அமைப்பினூடாகச் செயற்படும் போது, அந்த ஏற்றத் தாழ்வுகளை நியாயப்படுத்துவதிலும் நிறுவனமாக்கப்பட்ட மதம் ஒரு பங்கை வகித்துள்ளது. மதம் ஒடுக்குமுறையின் சார்பான சித்தாந்தமாகிய சூழலில் அதற்கெதிரான எழுச்சி மதச்சீர்திருத்தமாகவும் புதிய ஒரு மதமாகவும் தன்னை அடையாளங்காட்டியுள்ளது. இதற்கான உதாரணங்களில் கிறிஸ்துவத்தின் தோற்றமும் அதன் தொடக்கபரம்பலையும் இஸ்லாத்தின் தோற்றத்தையும் பரம்பலையும் சமணம், பௌத்தம் போன்ற மதங்களின் உருவாக்கத்தையும் வளர்ச்சியையும் கூறலாம். பின்னர் இதே மதங்கள் அரச அதிகாரத்துடனும் ஆளும் வர்க்கத்துடனும் உறவு பூண்டு கோலோச்சிய காலத்தில், அவற்றுக்கெதிராக அவற்றின் உள்ளும் வெளியிலும் மதத்தொடர்பான வடிவிலேயே எதிர்ப்பு இயக்கங்கள் எழுந்துள்ளன. இந்த எதிர்ப்பு குறிப்பான ஒரு வடிவிற்தான் எழுமென்றில்லை. கத்தோலிக்கத் திருச்சபையிற்கெதிரான சீர்திருத்தக் கோரிக்கைகளே முடிவில் பல வேறு புரட்டஸ்தாந்து மதங்களாக வளர்ந்தன. அண்மைக் காலங்களில் விடுதலைக்கான இறையியல் என்பது கத்தோலிக்கத் திருச்சபைக்குள் இருந்து கிறிஸ்துவின் பேரால் மக்களது போராட்டங்களை ஆதரிக்கும் ஒரு போக்காக லத்தின் அமெரிக்காவில் வளர்ச்சி கண்டது. பிராமணிய மதத்தின் வருணாசிரம தருமத்திற்கும் ஒடுக்குமுறைகட்குமெதிராக வளர்ந்த சமணமும் பௌத்தமும், பின்பு தாமும் அதிகாரம் சார்ந்து நிலைத்து நிற்க முற்பட்டபோது, அதற்கெதிரான எழுச்சி தமிழ் நாட்டில் பிராமண மதம் என்று கூறத்தக்க சைவத்தினூடு, காரியத்தை ஓரளவுக்கேனும் நிராகரித்து, பக்தி இயக்கமாக வடிவு பெற்றது. இந்த எழுச்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு மீண்டும் பிராமணிய வர்ணாசிரம மதங்கள் அதிகாரம் பெற்ற சூழலில் சித்தர் மரபு ஒரு எதிர்ப்புக் குரலாகியது:

இவ்வாறான போக்குக்களை வெவ்வேறு வடிவங்களில் வெவ்வேறு சமூக வரலாற்றுச் சூழல்கள் இயலுமாக்குகின்றன, ஆபிரிக்க மக்களை அடிமையாக்கி ஆளும் முயற்சியோடு இணைந்து செயற்பட்ட கிறிஸ்துவம் அவர்களது விடுதலைப் போராட்டங்களில் ஓரளவுக்கும் அவர்களது எதிர்ப்புக் குரல்களை வெளியிடுவதற்கான ஒரு வடிகாலாக விரிவான அளவிலும் பயன்பட்டுள்ளது. அமெரிக்க நீக்ரோ மக்களின் வழிபாட்டுப் பாடல்கள் சில பின்னைக் காலத்தில் அவர்களது உரிமைப் போராட்ட இயக்கங்களில் மக்களை ஒருங்கிணைக்கும் போராட்டக் கீதங்களாகவும் பயன்பட்டுள்ளன. எதிர்ப்பின் குரல் இறை வழிபாட்டுக்குள்ளாகவும் அதைக் கூறும் மொழியூடாகவும் இசை வடிவினூடாக இன்னும் பிற முறைகளிலும் தன்னை அடையாளங் காட்டியுள்ளது,

மத மாற்றம் என்பது இந்தியத் துணைக்கண்டத்தில் பலவேறு சூழ்நிலைகளில் நிகழ்துள்ளபோதும், பல இடங்களில் இந்து மதத்தின் சாதியத்திற்கு எதிரான ஒரு எதிர் நடவடிக்கையாக அமைந்திருந்ததை யாரும் மறுக்க முடியாது. மத மாற்றம் சமூக விமோசனத்திற்கு வழிவகுத்ததா என்பது வேறு விடயம். அம்பேத்கர் இந்தியாவில் தாழ்த்தப் பட்டோரை புத்த மதத்திற்கு மாறும்படி சொல்லி அதை நடைமுறைப் படுத்தியதும் 1950 களில் வட இலங்கையில் இதையொத்த ஒரு நடவடிக்கை எடுக்கப்பட்டதும் சமூக அளவிலான நடவடிக்கைகள், தனிப்பட்ட முறையில் அல்லது குடும்பமாக மதம் மாற்றப் பட்டோரின் மனதில் சாதிக் கொடுமை ஒரு முக்கியமான காரணியாகவே இயங்கியது என்பதை நாம் மறுக்க முடியாது. இம் மத மாற்றங்கள் தனிப்பட்ட நலன்கட்காக வசதி படைத்த மேற்தட்டு மாந்தர் நடுவே நடந்த மதமாற்றங்களிலிருந்து வேறுபட்டவை.

'எதிர்ப்பின் குரலாக மதம்' என்ற விடயத்தை எல்லையின்றி விரித்துக் கொண்டு போக முடியும். ஏனெனில் உலகில் ஒரு நீண்ட வரலாற்றுக் காலப் பகுதியில் மதமும் அரசியலும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவையாக இருந்தன. முதலாளித்துவத்தின் எழுச்சியே மதத்தினின்று ஐரோப்பிய அரசியல் விடுபடுவதை இயலுமாக்கியது. ஆயினும், முதலாளித்துவம் மதத்தை எப்போதுமே தனது தேவைகட்கேற்ப இயக்கியும் பயன் படுத்தியும் வந்துள்ளது:



இங்கு நாம் கவனிக்க வேண்டியது எதையென்றால் மதம் எதிர்பினதும், கிளர்ச்சியினதும் குரலாக மட்டுமன்றிச் சமுதாய எழுச்சியினதும் புரட்சியினதும் வாகனமாகவும் செயற்பட்டுள்ளது என்பதையே. அதே வேளை இந்த எழுச்சிகளதும் புரட்சிகளதும் வெற்றிகள் கொண்டுவந்த சமுதாய மாற்றங்களின் தன்மை பற்றி நமக்கு அதிகம் மயக்கம் இருக்க இடமில்லை:

## உலகமயமாதலும் நாமும்

உலகளாவிய பொருளாதாரத்தில் மூன்றாம் உலக நாடுகள் எதையெல்லாம் இழந்துள்ளன என்பதை நாம் பார்க்க வேண்டும். உலகளாவிய பொருளாதாரம் மூன்றாம் உலக நாடுகள் கொண்டுள்ள சுயசார்பை இல்லாமல் செய்து விடுகிறது. உலகளாவிய பொருளாதாரம் தொழில் துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளின் மிகப் பெரிய வளர்ச்சிக்கு மட்டுமே உதவுகிறது:

வளர்ச்சியடைந்த நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை செல்வாதாரங்களையும் குறைந்த கூலிகொடுத்து மூன்றாம் உலக நாடுகளின் மனித உழைப்பையும் வரலாறு கண்டிராத அளவில் சுரண்டி வருகிறது.

வளர்ந்த நாடுகளின் முதலீடு மூன்றாம் உலக நாடுகளில் பெருகிக்கொண்டே வருகிறது. இப்படி வளர்ச்சியடைந்த முதலாளித்துவத்திற்கு உதாரணமாக ஐரோப்பாவை கொள்ளலாம். அதிகமான தொழில் வளர்ச்சி உள்ளது. அதே நேரத்தில் வேலையில்லாத் திண்டாட்டம் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே வருகிறது. உலகளாவிய பொருளாதாரத்தால் அப்படி என்ன நிகழ்ந்துவிடப்போகிறது. வேற்றுமை உலகளாவியதாக ஆகப்போகிறது; சமூக அநீதி உலகளாவியதாக ஆகப்போகிறது; வறுமை உலகளாவியதாக ஆகப்போகிறது. இத்தகைய உலகளாவிய பொருளாதாரத்தோடுதான் நாம் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்றும் - வாங்கியும் வாழவேண்டிய நிலையில் உள்ளோம்.

— ஃபிடல் காஸ்ரோ

அடிமைகளின் கிளர்ச்சிகள் மூலம் நிலவுடமை அமைப்பு உருவானதே ஒழிய, சமத்துவமான சமுதாயமல்ல. விவசாயிகளின் கிளர்ச்சிகள் உலகின் பல நாடுகளிலும் ஏற்பட்டுள்ளன: ஆயினும் அவற்றால் உழைப்பவனுக்கே நிலம் என்ற நீதியை வென்றெடுக்க முடியவில்லை. பாட்டாளிவர்க்கத் தலைமையிலான எழுச்சிகளே உழைப்பவர்க்கு உலகம் சொந்தம் என்ற நிலைப்பாட்டினின்று போராடி மனித சமத்துவத்துக்கான செயற்பாட்டுத் தளத்தை உருவாக்கியுள்ளன.

ஒவ்வொரு கிளர்ச்சியும் அதனதன் காலத்தின் குழந்தை மட்டுமல்ல அதனதன் காலத்தின் கைதியுங்கூட. எனவே கடந்த காலக்கிளர்ச்சிகளை நோக்கும் போது அவற்றின் வெற்றிகளினின்றும் தோல்விகளினின்றும் நாம் கற்க வேண்டியுள்ளது என்பது தெளிவாகும். அவற்றால் நாம் ஊக்குவிக்கப்படும் அதே வேளை அவற்றை அப்படியே பிரதி செய்வது எவ்வளவு ஆபத்தானது என்பது பற்றியும் நாம் கவனமாயிருக்க வேண்டும்: அவற்றின் தோல்விகளாலும் அவற்றின் வெற்றிகள் திசைதிருப்பப்பட்ட சூழ்நிலைகளாலும் மனம் தளராமல் இருப்பது முக்கியமானது இது ஒருபுறமிருக்க, அதிகார வர்க்கம் எவ்வாறு எதிர்ப்பின் சிந்தனையையும், மொழியையும், செயற்பாட்டையும் எதிர்கொண்டது என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். எதிரி மக்களிடமிருந்து கற்பது போல மக்களும் எதிரியிடமிருந்து கற்க வேண்டி இருக்கிறது. இக் கல்வியின் நோக்கம் எதிரியைப்பின்பற்றுவது அல்ல. மாறாக, மக்கள் தமது போராட்ட வலிமையையும் தந்திரோபாயங்களையும், யுத்த தந்திரத்தையுங்கூட மேலும் கூர்மைப்படுத்துவதாகும்.

மேற்கொண்டு இக்கட்டுரையிற் கலை இலக்கியங்களில் மக்களது எதிர்ப்பின் குரல்கள் எசமானர்களால் எவ்வாறு கையாளப்பட்டு வந்துள்ளன என்பது பற்றியும் அதிலிருந்து நாம் கற்கக்கூடியன பற்றியும் கவனிக்குமுன், எதிர்ப்பின் குரல்களை வரலாற்றில் வைத்து மதிப்பிடும் தேவை பற்றி நாம் வலியுறுத்தியாக வேண்டும்.

## 2. சமுதாய வரம்புகளிடையே எதிர்ப்பின் குரல்கள்

எதிர்ப்பின் குரல்கள் எல்லாமே சமுதாய மாற்றத்திற்கான குரல்கள் அல்ல. பெருவாரியான சூழல்களில் எதிர்ப்பின் குரல்கள் அடிப்படையான சமுதாய மாற்றத்தை வேண்டுவன அல்ல, சீர்திருத்தந்திற்கான குரல்கள் வரலாற்றில் பெரும்பான்மையானவையாக இருப்பதில் வியப்புக்கு இடமில்லை. ஏனெனில், அடிப்படையான சமுதாய மாற்றத்திற்கான குரல்கள் பெரும்பான்மையானவையாகத் தோன்றும் சூழல்கள் அப்படிப்பட்ட சமுதாய மாற்றத்தை உண்டாக்கும் சூழல்களாக அமைய வேண்டும்; இன்



னொருபுறம்அத்தகைய மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய வரலாற்றுச் சக்திகள் எழுச்சி பெறுங் காலங்கள்குறுகியவை, அவற்றின் எழுச்சி மிகவும் வலிய ஒரு சமுதாயத் தாக்கத்தை உடையது: ஆயினும் அதற்கு முன்னோடியாகச் சமுதாயத்தின் அடிப்படையான அமைப்பைக் கேள்விக்கு உட்படுத்தாமல் குறிப்பான பிரச்சினைகளையிட்டு எழும் ஆட்சேப குரல்கள் விரிவான தளமற்றவையும் சிறு மாற்றங்களுடன் நிறைவு காண்பவையாகவும் இருப்பது இயல்பு, இதனிலும் முக்கியமாக, அடிப்படையான மாற்றத்தை வேண்டி நிற்கக் கூடிய சக்திகள் ஆளும் வர்க்கத்தால் மிகவும் கொடுமையான முறையில் எதிர்கொள்ளப்படுகின்றன; மறுபுறம் ஆளும் வர்க்கம் தன்னுடைய பழைய சமுதாய அமைப்பு நெருக்கடிக்கு உட்படும் போது அதைத் தவிர்ப்பதற்குச் சில விட்டுக் கொடுப்புக்களையும் சமரசங்களையும் சீர்திருத்தங்களையும் ஏற்றுக்கொள்கிறது:

வரலாற்றில் முதலாளியத்தின் வருகை வரை, எல்லாப் பெரிய மாற்றங்களிலும் ஒடுக்கப்பட்ட மக்களது எழுச்சி வேறுபட்ட அளவுகளிற் பயன்பட்டுள்ளது. அடிமைகளின் கிளர்ச்சியோ விவசாயிகளது எழுச்சியோ நேரடியாக மனித சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயங்கட்கு வழி வகுக்கவில்லை. ஆயினும் அவை வரலாற்றை முற்போக்கான திசையில் உந்துவதில் ஒரு பங்கை அளித்துள்ளன. அம்மட்டில், அவற்றை அவற்றுக்குரிய வரலாற்றுச் சூழலில் வைத்து மதிக்க வேண்டிய தேவை வரலாற்றின் மாணவர்கட்கு உண்டு.

ஒடுக்கப்பட்ட மக்களாலும் அவர்கள் சார்பாகவும் எழுப்பப்படும் எதிர்ப்பின் குரல் குறிப்பிட்ட சமுதாயச் சூழல்களின் வரையறைகட்கு உட்பட்டது. எந்தவொரு சமூகத்திலும் ஒடுக்குவோரும் ஒடுக்கப்பட்டோரும் பேரளவிலேனும் சில சமுதாய விதிமுறைகளை ஏற்றே நடக்கின்றனர். அவற்றின் அடிப்படையிலான சிந்தனைமுறை முழுச் சமுதாயத்தையும் ஆழமாக ஊடுருவி நிற்கிறது. அது எவ்வளவு தூரம் கேள்விக்கு உட்படுத்தப்படக்கடடும் என்பது தான் எதிர்பின் தன்மையையும் பரிமாணத்தையும் தீர்மானிக்கிறது. இந்த இடத்திற் தான் மாக்ஸியம் அதற்கு முந்திய காலங்களின் சமுதாயச் சிந்தனைகளை எல்லாம் மீறி, மெய்யியலின் நோக்கம் சமுதாயத்தை விளக்குவது மட்டுமல்ல அதை மாற்றியமைப்பதுமாகும் என்று கூறியது. இந்த நோக்கே மாக்ஸியக் கலை இலக்கியங்கட்கும் பொருந்தும். இத்தகைய சிந்தனை ஒன்றுக்குப் பழக்கப்பட்ட ஒருவருக்கு, இது போன்று அடிப்படையான சமுதாய மாற்றத்தை வெளிவெளியாக வேண்டுகிற கலை இலக்கியங்களை முந்திய வரலாற்றுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலங்களிலும் தேடுகிற ஆவல் ஏற்படுவது இயல்பு. இந்த இடத்தில் நமது கடந்த காலங்கள் எத்தகைய சமூக அடக்கு முறைகளைக் கொண்டிருந்தன என்பது முக்கியமாகிறது. சமுதாய விதிகள், சடங்கு சம்பிரதாயங்களினூடும் மதங்கள் மற்றும் மனித உறவு சார்ந்த சகல வழமைகளிலும் ஆழமாகப் பொதிந்து செயற்படுகின்றன. எனவே தான் எதிர்ப்பு இலக்கியமும் அவற்றை ஒட்டிச் செயற்படும் தேவையும் பயனும் காணப்படுகின்றன. அதே வேளை, சமுதாய மரபுகட்குச் சவாலாகவும் சமுதாய நடைமுறையை மறுதலித்தும் மாற்றுச் சிந்தனைகள் வந்தே உள்ளன. இவ் இரண்டு வகையான எதிர்ப்புக் குரல்களும் சமுதாயத்தில் எவ்வாறு எழுகின்றன எனவும் அவற்றை எசமான வர்க்கம் எவ்வாறு எதிர் கொள்கிறது எனவும் இனிக் கவனிப்போம்

## 3. எதிர்ப்பின் குரல் வகைகள்

சமகாலச் சூழலில் கூட எதிர்ப்பு இலக்கியம் எல்லாவிடத்திலும் ஒரே விதமான முறையில் வெளிப்படாது. ஒரு குறிப்பிட்ட போராட்டத்தின் போக்கிலும் எதிர்ப்பிலக்கியத்தின் குரல் பலவேறு தளங்களில் வெவ்வேறு விதமாக ஒலிக்கக் கூடும். எதிர்ப்பு இலக்கியம் என்பது தன்னளவிலேயே முற்போக்கான ஒன்றாக அமைவதில்லை என்பது பற்றியும் விவரிக்க அவசியமில்லை. ஆயினும் எதிர்ப்பு என்பதற்குத் தன்னளவிலேயே ஒரு பெறுமானத்தையும் கிளர்ச்சிகள் யாவுமே தம்மளவில் நியாயமானவை என்ற நியாயப்பாட்டையும் புகுத்தும் முயற்சிகள் சில காலமாகவே இருந்து வந்துள்ளன.

சமுதாய வளர்ச்சியின் திசை பற்றி நம் ஒவ்வொருவரதும் பார்வை எவ்வாறு வேறுபடுகிறதோ அதற்கேற்ப கிளர்ச்சி ஒவ்வொன்றும் எதிர்ப்பிலக்கியம் ஒவ்வொன்றும் பற்றிய நமது பார்வை வேறுபடும். எனினும் அதிகாரத்திற்கு எதிரான எதிர்ப்பிலக்கியச் செயற்பாடுகள் ஒவ்வொன்றினின்றும் நாம் கற்க நிறைய உண்டு. இத்தத்துவமும் பிற மதவாத அரசியல் முனைப்புக்களும் வரலாற்றைப் பின்னோக்கித் திருப்பும் நோக்கில் பயன்படுத்தும் எதிர்ப்பு இயக்கங்களும் ஊக்குவிக்கும் கலை இலக்கிய வடிவங்களும் ஒரு முற்போக்குச் சக்தியால் பிரதி பண்ணக்கூடியன வல்ல. ஆயினும் அந்தப் போராட்ட முறைகளிலுள்ள பயனுள்ள கூறுகளைக் கற்கவும் சமுதாயச் புரட்சிக்குச் சாதகமான முறையில் பயன்படுத்தவும் முடியும். இதற்குப் பின்னர் வருவோம்.



போராட்ட இலக்கியம் வெளிவெளியாகத் தனது அரசியல் நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்து கொண்டு வருவதைத் தூய இலக்கியவாதிகள் விரும்புவதில்லை. வெளிவெளியான அரசியல் நிலைப்பாடு அவர்கட்கு உடன்பாடற்றது. புரட்சிகர இலக்கியவாதிக்கு இலக்கியத்தைத் தனது அரசியலுடன் இணைப்பது இயல்பாகவே வருவது. வலிந்து அரசியற் கருத்துக்களைத் திணிப்பதோ வெறும் கோஷங்களோ புரட்சிகர இலக்கிய முயற்சி ஆகி விடாது என்பதில் நமக்கு ஐயமில்லை. அதே வேளை, எவரையும் மகிழ்விக்கும் நோக்கில், அரசியற் பார்வையை மூடி மறைக்கவும் எது வித அரசியலுமே இல்லாது இலக்கியம் படைக்கவும் ஒரு புரட்சிகர இலக்கியவாதி செயறபடுவது அரசியலை வலிந்து திணிப்பதை விடப் போலியானது.

ஒரு படைப்பாளி தனது அரசியற் பார்வையை எவ்வளவு தூரம் தெளிவாகவும் வெளிப்படையாகவும் கூற வேண்டியும் கூற இயலுமாயும் உள்ளது என்ற நிலவரமே பல இடங்களில் ஒரு படைப்பின் அரசியலின் வெளி வெளியான பண்பைத் தீர்மானித்துள்ளது. சில கலை வடிவங்களின் தன்மையை அனுசரித்துக் கருத்துக்களைக் கூறும் விதம வேறுபட்டே அமைய நேரிடலாம். அமர இலக்கியங்கள் எனப்படுவன அமரத்துவம் வேண்டிப் படைக்கப்பட்டனவா என்பது மிகவும ஐயத்துக்குரியது. சில இலக்கியங்களது நீண்டகால நிலைப்புக்குப பல வேறு சமூக வரலாற்றுக் காரணங்கள் உள்ளன. இலக்கிய வளர்ச்சியின் பாரிய திருப்பு முனைகளாக அமைந்த எத்தனை இலக்கியங்கள் இன்று நிலைத்தோ அறியப்பட்டோ உள்ளன? இலக்கியங்களின் வெற்றி தோல்விகட்கு எளிமையான அளவுகோல்கள் இல்லை. எனினும் ஒரு எதிர்ப்பிலக்கியம் எந்த மக்களைச் சென்றடையவும் எந்தச் சமூக நடைமுறைகட்கு எதிராகவும் உருவானதோ அந்த இலக்குக்களை எட்டிய அளவில் அதன வரலாற்றுப பணி நிறைவு பெறுகிறது. அதனிலும் உன்னதமான வெற்றி என எதுவும் அதற்குத் தேவையில்லை.

உலகில் எல்லாவிடத்தும் சமுதாய மாற்றம் வேண்டி வெளிவெளியாகவே குரல் கொடுக்கும் சாத்தியப்பாடு இன்றும் இல்லை. சுதந்திர சமுதாயங்கள் எனப்படுவனவற்றுள், சந்தை மீதும் தொடர்புச் சாதனங்கள் மீதும் பத்திரிகை வினியோகம் உட்படப் பலவேறு கருத்துப் பரிமாறல் வசதிகள் மீதும பெருமுதலாளியத்தின் ஆதிக்கம் பெரிது. சமுதாய மாற்றத்திற்கான குரல்களை விளிம்பு நிலைக்கு ஒதுக்கி வைக்கும் வசதி எசமானார்களிடம் உள்ள வரையில், கருத்துச் சுதந்திரம் பற்றி அவர்கள் வாய் கிழியப் பேசுவார்கள் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் எத்தனையோ நூற்றாண்டுக் காலமாக வெளிப்பட்டு வந்த எதிர்ப்பிலக்கியக் குரல்களில், சமுதாய மாற்றத்தை வேண்டியோ சமுதாய ஒடுக்கு முறைகளை அம்பலப் படுத்தியோ வெளிவெளியாகப் போர்ப் பிரகடனம் செய்தவை எத்தனை? எதிர்ப்பின் குரல்களாக வெளியானவை அடிப்படையான சமுதாய அமைப்பை வேறுபடும் அளவுகளில் ஏற்றுக் கொண்டவையாகத் தெரிவதற்குப் பல காரணங்கள் இருக்கலாம்.

முதலாளித்துவம் தன் தேவைகட்கும் தன் வலிமை மீதான திடமான நம்பிக்கைக்கும் உட்பட்ட சூழல்களில் அனுமதிக்கும் கருத்துச் சுதந்திரத்தின் அளவு எப்போதும் ஒரே விதமானதல்ல. கருத்துச் சுதந்திரம் பல்வேறு முறைகளில் கட்டுப்படுத்தப்படுவது பற்றியும் எசமான வர்க்கத்தின் நலன்கட்கு எதிரான வலிமை பெறும் போது நசுக்கப்படுவது பற்றியும் நாம் அறிவோம். முதலாளிய அரச ஒடுக்குமுறை தீவிரமாக உள்ள சூழல்களில் எதிர்ப்பு இலக்கியங்களிற் கருத்து வெளிப்படும் முறை அப்படிப்பட்ட ஒடுக்குமுறை இல்லாத சூழ்நிலைகளில் உள்ள வெளிப்பாட்டு முறையினின்றும் வேறுபட்டது எனவும் நாம் அறிவோம். எனவே வரலாற்றில் எதிர்ப்பின் குரல்களை மதிப்பிடும் போது நம் உடனடியான சூழலுடன் ஒப்பிடுவது பொருந்தாது என்பது திரும்பவும் வலியுறுத்தப்பட வேண்டும்.

பக்தி இலக்கியம் எதிர்ப்பு இலக்கியப் பண்புடையது எனவும் சித்தர் பாடல்கள் எதிர்ப்பு இலக்கிய வகையின எனவும் அறிவோம். இவை எதை எந்தளவுக்கு எதிர்த்தன என்று கவனித்தால் அவை பூரணமான சமுதாய மாற்றத்திற்கான இலக்கியங்கள் அல்ல என்பதை எளிதாகவே உணரலாம். ஆயினும் சமுதாயத்தில் இருந்த மத அடிப்படையிலான சில அதிகார அடுக்குக்களை வரையறைக்கு உட்பட்டாயினும், அவை கேள்விக்கு உட்படுத்தின. சைவ, வைணவ பக்தி இலக்கியங்களில் இறை வழிபாட்டில் சாதியத்தை மறுக்கும் குரல்கள் ஒலிக்கின்றன. அரச அதிகாரத்திற்கு எதிரான தைரியமும் தென்படுகிறது. வெகுஜனப் பார்வையும் தென்படுகிறது. ஆயினும் சமுதாய அமைப்பிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை அறவே நீக்குவது அந்த இலக்கியங்களின் நோக்கமல்ல. பிராமணிய இந்து மதங்களான சைவமும் வைணவமும் மாற்றுச் சமயங்கட்கெதிராக ஈடு கொடுத்து நிற்பதற்கு இயலாது போன சூழ்நிலையிலேயே முற் குறிப்பிட்ட பக்தி இலக்கியப் போக்குக்கான தேவை ஏற்பட்டது.

சித்தர்களுடைய பாடல்களில் இறை நம்பிக்கை முற்றாக மறுக்கப்படாவிடினும் பிராமணிய இறைக் கொள்கையும் வழி



பாடு பற்றிய அணுகு முறையும் கடுமையாகக் கேள்விக்கு உள்ளாகின்றன. சித்தர்கள் எவ்வளவு தூரத்திற்குச் சமுதாயத்தினுள் ஒரு வலிய சக்தியாகச் செயற்பட்டார்கள் என்பது தெளிவில்லை. ஆயினும் அவர்கள் செயற்பட்ட சூழலை வெகுசன ஈடுபாட்டை நாடிய பக்தி இலக்கியச் சூழலுடன் சமன்படுத்த இயலாது. சித்தர்கள் சமுதாய நீரோட்டத்தினின்று முற்றாக ஒதுங்கி வாழ்ந்தோர் என்ற கருத்து அப்படியே உண்மையாக இருக்க நியாயமில்லை. ஆயினும் அவர்களது கலகக் குரல்கள் தமிழரது ஆன்மீகச் சிந்தனையின் ஒரு முக்கியமான பகுதியாக வெகுகாலமாக அடையாளங் காணப்படவில்லை.

எதிர்ப்பு இலக்கியம் அங்கீகாரம் பெற்ற இலக்கியமாக நிலைப்பது எளிதல்ல. அவற்றின் எதிர்ப்புப் பண்புகள் ஆளும் வர்க்க நலன்கட்கு எதிரானவையாக அடையாளம் காணப்படும் வரை, அவற்றைப் பேணுவதற்கு அரச, மத நிறுவன ஆதரவு கிட்டுவது இயலாதது. இத்தகைய இலக்கியங்கள் புறக்கணிப்பிற்கோ அழிவிற்கோ ஆளாவது தவிர்க்க இயலாததே.

நாட்டார் கலை இலக்கியங்கள் நேரடியான அரச ஆதரவையோ சீமான்களதும் மடாதிபதிகளதும் தயவிலோ தழைத்தவை அல்ல. அந்த வகையில் அவை மற்ற இலக்கிய வடிவங்களை விட நேரடியாகவே மக்களது இன்ப துன்பங்கள் பற்றிப் பேச வல்லன. இதற்கான ஆதாரங்களை இன்று வழக்கிலிருந்து வரும் இலக்கியங்களிலும் காணமுடியும். எனினும் சமுதாய மாற்றத்திற்கான எழுச்சி இல்லாத சூழல்களில் நாட்டார் இலக்கியத்தின் எதிர்ப்புக் குரல் மக்கள் படும் இன்னல்கள் பற்றிக் கூறுவதுடன் எசமானர்கள் மீதான பகைமை உணர்வைப் பெரும்பாலும் குறிப்பால் உணர்த்தும் தன்மையுடையனவாகவே இருக்குமென எதிர்பார்க்கலாம். விலக்கான சூழ்நிலைகள் உள்ளன. மலையகத்து வாய்மொழி இலக்கியத்தில் இதற்கான சில சான்றுகள் இருந்தாலும் இவை வெளிப்படையாகவே குறைகளைக் கூறுகிற அளவுக்கு அப்பால் போவதற்கு இடமில்லை.

ஆணாதிக்கத்திற்கு எதிரான பெண்நிலை எதிர்ப்புக் குரல்கள் புத்த மதச் சார்பான இலக்கியத்தினுள் பெண் கவிஞர்களால் ஆக்கப்பட்ட 'தேரி காதா' வில் காணப் படுகின்றன. இவ்வாறான இலக்கியங்கள் பெருமளவும் அழிவதற்கு ஏதுவாக உள்ள காரணங்களை விளங்கிக் கொள்வதில் நமக்குச் சிரமம் இராது.

ஒடுக்கப்பட்ட மக்கள் தமது எதிர்ப்பை வெளியாகக் கூற இயலாத போது தமக்கெட்டக் கூடிய கலை வடிவங்களூடு அவற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றைக் கூறுவதற்கு முற்படுவது இயல்பானது. நாட்டார் கூத்துக்கள் இத்தகைய எதிர்ப்பின் வாகனங்ளகாகச் செயற்பட்டு வந்ததற்குச் சமகாலத்திலும் சான்றுகள் உள்ளன. உதாரணமாகக் காத்தான் கூத்தில் காத்தவராயன் என்ற தெய்வத்தின் வழியாக சமூகக் கொடுமைகள் பற்றிய கூத்துக்கள் வருவதோடு இந்து மதத்தில் உயர் நிலையில் உள்ள தெய்வங்களைக் கேலி செய்யும் கூற்றுக்களும் வருகின்றன. தெய்வங்கள் வாயிலாக இகழப்படுவோர் அவற்றை வழிபடும் உயர் சாதியினரே. ஒடுக்குகிற உயர் சாதியினர் மீதான பகைமை அவர்களது கடவுளர் மீது ஏற்றப்படுகிறது. தமிழகத்தில் அபிமன்யு வதம் கூத்தில் அபிமன்யு துரோணருடன் வாதிடுவதைப் பயன்படுத்திப் பார்ப்பன விரோதமான பல கடுஞ் சொற்கள் கூறப்படுகின்றன (நகர மேடையில் கண்டதை விடக் கடுமையான சொற்களைக் கிராமங்களில் நடக்கும் கூத்துக்களில் கேட்கலாம் என்று தெருக்கூத்துடன் பரிச்சயமிக்க ஒரு நண்பர் மூலம் அறிந்தேன்).

எதிர்ப்பின் இன்னொரு வடிவம் ஒதுங்கிப் போதல். இது ஒரு முழுச் சமுதாயத்தாலும் செய்ய இயலாதது ஆயினும் சமூகத்தின் விளிம்பிற்குத் தம்மை விலக்கிக் கொள்ளும் போக்கை நாம் அண்மைக் காலங்களில் ஹிப்பிகள், பன்க் போன்ற மேல் நாட்டு விளிம்புச் சலாசாரக் குழுக்களிடமும் காணலாம் இவ் வகையான எதிர்ப்பு ஒரு சமூதாய மாற்றத்தைக் கொண்டு வரும் தன்னம்பிக்கை அற்ற பண்பையுடையது என்பது முக்கியமானது சமுதாய அமைப்பை நிராகரிக்கிற அளவிற்கு இதில் உள்ள எதிர்ப்புக் குரல் அதை எப்படி மாற்றுவது என்று வழி காட்ட இயலாத ஒன்றாகவே உள்ளது.

ஒடுக்கப்பட்ட மக்களே தமது சார்பாகச் சமுதாயத்தை மாற்றப் போராடுகிற சூழல்களில். வெளிவெளியாகவும் தன்னம்பிக்கையுடனும் எதிர்ப்பின் குரல் எழுகிறது இது வரலாற்றின் அதிபுரட்சிகரமான வர்க்கமான பாட்டாளி வர்க்கத்தின் வருகையுடன் உருவான ஒரு சூழ்நிலை. இதை விளங்கிக் கொண்டால், வெளிவெளியான அரசியற் கருத்துடைய இலக்கியம் பற்றிய பல மறுப்புக்கள் எழும் காரணத்தை உணரலாம். இந்த இலக்கியங்களை சமுதாய மாற்றத்திற்காகக் குரல் கொடுப்பது இயலாத சூழல்களிலும் அத்தகைய மாற்றங்களைப் பற்றிக் கருதாத சூழல்களிலும் எழுந்த இலக்கியங்களின் அடிப்படையில் மதிப்பிடுவது, வரலாற்றுப் பார்வையில்லாமையால் நிகழ்வது.

இன்றைய எதிர்ப்பு இலக்கியம் என்றோ இருந்த எதிர்ப்பு இலக்கியம் போலவே தன்னை அமைத்துக் கொள்ள அவசியம் இல்லை; அது தனது சமுதாயச் சூழலில் எந்தளவு வலிவுடனும் எந்தளவு ஆற்றலுடனும் மக்களை அடைய முடியுமோ, அந்தளவுக்கு அதன் செயற்பாடு விரிவடைகிறது: அது தனக்கு எட்டக் கூடிய எந்த இலக்கிய வடிவையும் பயன்படுத்தத் தடை இல்லை: ஆயினும் அது தனது தெரிவுகளைத் தனது உலக நோக்குக்கும் தனது சமுதாய இலக்குக்கும் ஏற்றபடி செய்து கொள்கிறது.

எனவே இன்றைய எதிர்ப்பு இலக்கியம் நேரடியாகவோ மறைமுகமாகவோ முழுமையாகவோ பகுதியாகவோ தனது எதிர்ப்புத் தன்மையை வெளிப்படுத்திக் கொள்கிறது. அந்தத் தெரிவு பற்றி தூய அழகியல் வாதிகளது விமர்சனங்கள் இலக்கியத்தின் நோக்கம் பற்றி அடிப்படையாகவே தவறான ஒரு நிலைப்பாட்டினின்று எழுகின்றன.

வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு விதமாக வெளியான எதிர்ப்பு இலக்கியங்களை எசமான இயக்கம் எவ்வாறு கையாண்டு வந்துள்ளது என்று இனிக் கவனிப்போம்.

(வளரும்)

## படி

உனக்குள்
ஒரு தீயை வளர்
உனது சிந்தனையை
ஒடுக்கிச் சிறைப்படுத்தும்
மூடத்தனங்களுக்கு
முதல்
தீயை மூட்டு.

உனது
நெஞ்சத்தின்
வளைவுகளை
நிமிர்த்து.

நோவரினும்
உனதறிவை
அதில் தேய்த்து
நேராக்கு.

அறியாமை
விலங்கொடிக்க
படி

உலகின்
அடிமைத்தனங்களை
உடைத்தெறிய
அதுவே
நீ வைக்கும்
முதல் அடி.

— வித்யா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலைத் துறைமுகம்

எத்தனையோ கப்பல்களைக் கண்டது இத் துறைமுகம்
எத்தனையோ கப்பற்காரர்களைக் கண்டது இந் நகரம்
அம்மா சொன்ன கப்பல்கள் ஆச்சி சொன்ன கப்பல்கள்
நானும் கண்ட கப்பல்கள்
வெள்ளைத் தொப்பி வெள்ளை உடை
வெள்ளைத் தோல் மாலுமிகள்
விரைவாக அடையுண்ட கதவிடுக்கின் வழிப் பாய்ந்து
அம்மாவின் விழிகளை ஆச்சியின் விழிகளை
அகல விரித்தது அச்சமா ஆவலா அதிசயமா
கடற்சிறையின் கதவு திறந்து மாலுமிகளை விடுவிக்கும் துறைமுகம்
கால்களை அகட்டிச் சரிந்து மாலுமிகள் நடந்த தெருவழியே
கைகளிற் கிடந்த சில்லரை கரைய
மீண்டும் சிறைக்கு அனுப்பி வைக்கும் துறைமுகம்
மாலை இருளைப் பொய்ப்பிக்கும் வாண வேடிக்கை
வந்தவை போர்க்கலங்கள் என்பதையும் மறக்கடிக்கும்
அம்மா சொன்ன ஆச்சி சொன்ன நானும் கண்ட கப்பல்கள்
பின்னர் ஒரு நாளும் வரவில்லை
கப்பலாற் கழித்துவிட்ட வண்ண வண்ணக் கொடிகள் மட்டும்
கலியாண வீடுகளிலும் கோவிற் திருவிழாக்களிலும்
தோரணங்களின் மேலாகத் தொங்கிப் பறந்த
நினைவு மனதில் நிழலாடும்
பின்னரும் கப்பல்கள் பல கண்டதுதான் இத் துறைமுகம்
வணிகக் கப்பல்கள் மீன்பிடிக்கப்பல்கள் போர்க் கப்பல்கள்
முன்பு போலில்லாவிடினும் கப்பல்கள் வந்து போவன
துறைமுக விளிம்பில் கடலின் ஓரத்தில் படகுத் துறையில்
எவரதோ வீட்டில் காவல் நிலையத்தில், நடு வீதியில்
அரச அலுவலகத்தில் அகதி முகாமில்
ஊர் திரும்பிச் செல்வதற்காக ஒரு கப்பலுக்குக் காத்திருக்கிறார்கள்
அம்மா சொன்ன கப்பல்கள் ஆச்சி சொன்ன கப்பல்கள்
நானும் கண்ட கப்பல்கள்
இன்னும் எத்தனையோ கப்பல்கள் வந்து போன துறைமுகத்தில்
ஊர் திருப்பிச் செல்வதற்கு ஒரு கப்பல்
ஒரே ஒரு கப்பல்...

— சேகர்



# ஒளிநாடி

● சி. சுதந்திரராஜா

சண்முகம் பென்ரோஸ் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்தவன். கல்பொடை ரயில் நிலையமும் குகைப்பாலமும் சலசலத்தோடும் அருவியுமே அவனறிந்த அகிலம். நவீன மோட்டார் வாகனங்கள் அங்கே வரவோ போகவோ மோட்டார் பாதை கூட அற்ற கைவிடப்பட்ட தோட்டம்.

ஏகமாக ஒதுக்கப்பட்ட தோட்டமாதலால் சர்வதேச நாணய நிதியம் ஒரு விஷப் பரீட்சை செய்து பார்க்கத் தொடங்கிற்று. கொள்ளை இலாபமீட்டுவதில் அந்தத் தோட்டம் கடைநிலையில் இருப்பதாகவே கணித்துக் கொண்டது. பச்சைப்பசேலெனப் பசுமையும் குளுமையும் காட்டிய தேயிலைச் செடிகளை எல்லாம் அழித்து மாற்றுப் பயிர் செய்திடும்படி உத்தரவு பிறப்பித்தது.

கொழுந்தெடுத்து உழைப்பில் ஒன்றியமான தொழிலாளிகளை பைகேப்பிள் தோட்டத்திற்கே கூலிக்கு போய்விடவே நிர்வாகமும் ஒத்துப் பாடியது.

தாயை விட்டுப் பிரிந்திட மனமில்லாத தனயன் போலவே லயத்தை விட்டகலாமல் சண்முகம் தென்படலானான். ஏகாந்தமாகி லயக்காம்பரா பலவும் வெறிச்சோடிப் போயின. பிழைப்புத் தேடி அட்டனுக்கும் நாவலப்பிட்டிக்கும் அநேகமானோர் கிளம்பினார்கள். மாட்டுக் கொட்டில்களாக சில காம்பராக்கள் மாற்றம் காட்டலாயின. புதுப்பசளைக் கோணிக் கிடங்குகளாகவும் மருவலாயின.

ரயில் பாதை வளைவாகவே அமைந்துவிட்ட மலைச்சாரல். கீழ் நோக்கிப் போகின்ற ரயில் மேலிருந்து வருகின்ற போதே எதிர்ப்புறத்தில் தெளிவாகத் தெரியும். வளைவுப் பாதையால் பென்ரோஸ் வந்து தாண்டிட ஓர் அரைமணி நேரமாவது கழியும். சின்ன வயதிலிருந்தே விநோதமும் வியப்பும் முட்டி வழிய இதையெல்லாம் பார்த்து நேரமறிவான்.

மாணிக்கமும் இவனைப் போலவே புல்லுவெட்டியும் கல்லுக் கட்டியும் பழகியவன். சண்முகத்தின் கூட்டாளி. மாற்றுப் பயிர்களாக மிளகையும் கடுகையும் மலைதேசத்தில் புதுவகைப் பயிர்களாகச் செய்கை பண்ணும் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

மாணிக்கத்தின் மனைவி பிரசவ நோவெடுத்த காலத்தில் போக்கு வரத்து வாகனமில்லாக் காரணியால் மரணமாகிப் போனவள். கால்நடையாகத் தான் நாவலப்பிட்டி ஆசுப்பத்திரிக்கேனும் போய்வர முடியும். பிரசவ வேதனையுடன் துடிப்பவளை எவ்வாறு அத்தனை தூரம் அவனால் இட்டுச் செல்வது? அவள் விட்டுச் சென்ற பிள்ளைச்செல்வங்களை வளர்த்தெடுப்பதில் மாத்திரம் மாணிக்கம் பிரயாசைப்பட்டான். நாவலப்பிட்டி கதிரேசன் வித்தியாலயம் வரை சென்று அவர்கள் படித்திட எவர் எவரையோ எல்லாம் தேடிக் கெஞ்சிக் கூத்தாடினான்.

படிக்கட்டுகள் தன்னும் அமைக்கப்படாத கடுஞ் செங்குத்தான மலைக்குன்றில் தேயிலை பக்டரி அங்கே அமைந்திருந்தது. தேயிலை அடைபட்ட பாரமான பெட்டிகளைத் தனித்துத் தலையிலேயே வைத்தபடி அந்தத் தலைகிறங்கும் செங்குத்துச் செம்மண் தரைவழி மூலம் கீழேயிருந்த ரயில் மடுவத்திற்கு மூதாதையர்கள் இப்பெட்டிகளைச் சுமந்தது பற்றியும் கேள்விப்பட்டிருக்கிறான்; ரயில் மார்க்கமாகவே கூட்ஸ் வண்டிகளில் ஏற்றப்பட்டு லண்டன் சீமைக்குப் போய்விடுவதாகச் சொல்லக் கேட்டிருக்கிறான்; கூட்ஸ் வண்டிகள் அங்கே தரிக்கின்ற தருணங்களில் தேயிலைப் பெட்டிகள் ஏற்றப்பட்டதை எல்லாம் கண்டிருக்கின்றான். இது வொன்றே உலகத்துடனான தோட்டத் தொடர்பாயுமிருந்தது.

நிர்வாகம் ரெம்பள்ஸ்ரோவுக்கு பக்டரியிலுள்ள உதிரிப் பாகங்களை எல்லாம் ஏற்றி விடும்படி பணிப்பு விட்டிருந்தது. மாணிக்கமும் சண்முகமும் எப்பாடு பட்டேனும் இதைத் தடுத்து விடவேண்டும் என்று முயன்று தோற்றுப் போனார்கள்.

பச்சைப் பாவடை விரித்திருந்தது போல் வனப்புக் காட்டிய பென்ரோஸின் அழகெல்லாமே மாற்றுப் பயிர்வகையால் குன்றிப் போயின, வேற்றுப் பசளையின் நாற்றத்தால் சூழல் மாசுபட்டது. இவர்களது நியாயமான உணர்வுகள் மறுதலிக்கப்பட்டு வளங்குவித்த இவர்களது உழைப்பெல்லாம் வீணடிக்கப்பட்டு இவர்கள் கண்டும் கேட்டும் அறிந்தேயிராத வெள்ளைச் சீமை முகாமைத்துவப் பணிப்பினால் சின்னாபின்னமாக்கப்பட்டார்கள்.

'கொரங்குமலைல மருந்தடிச்சிப்பிட்டியா'

கணக்குப்பிள்ளை குரல் நச்சரிக்கும்.

மாணிக்கம் சண்முகத்திடம் சைகை காண்பிப்பிப்பான். கணக்குப்பிள்ளை அவ்விடத்தை விட்டகன்றதும் இருவருமே கெக்கரித்துச் சிரிப்பார்கள்.

'எப்பண்ணே இந்த யதேச்சாதிகாரம் மாறும்'

அப்பாவியாகக் கேட்டான் மாணிக்கம்.

'ம் உற்பத்திச் சாதனமெல்லாம் எப்ப நம்மடை கைக்கு வருதோ அப்பத்தான்'

பெருமூச்சொன்றை இழுத்து விட்டபடி தூரத்துமலைகளை பார்த்தபடி விழிகளில் புதிய ஒளி வீசச் சொன்னான் சண்முகம்.





# துருவன்

○ மணி

என் தந்தை மடியில் நான் அமர்ந்த காட்சி எனது மாற்றாந்தாயின் மனதில் பொறாமைத் தீயாக மூண்டெழுந்தது. நான் வேகினேன். என் புண்களை ஆற்றவோ வெம்பி அழுத என் கண்களைத் துடைக்கவோ இயலாது என் தந்தையைத் தடுத்தது அவரது கோழைத்தனம். கொடுமையைத் தாங்கிய என்னால் கோழைத்தனத்தைத் தாங்க இயலவில்லை. நாடு நீங்கிக் காடேகினேன்.

முன் கண்டிராத இன்னல்கள், முன் அறிந்திராத இடர்கள், எண்ண முனையாத துன்பங்கள். என் பயணம் ஒரு நீண்ட நடைத் தவமாகத் தொடர்ந்தது. என் முகத்தில் அறைந்த மணற் புயல்களையும் என்னை முழுக்கி எழுப்பிய பேரலைகளையும் கால்களைத் தீய்த்த சுடுமணல் வெளிகளையும் வழி மறித்த மா மலைகளையும் சூறைக் காற்றையும் கடல் ஆழத்தையும் சதுப்பு நிலங்களையும் தாண்டினேன். புகலிடம் ஒன்றே இலக்காக நெடுந் தொலைவுகளைக் கடந்தேன். என் கடுந்தவம் வென்றது. என் தெய்வம் எனக்கு இரங்கியது.

வடபுலத்து வானவெளியிலே எனக்காக ஒரு இடத்தை ஒதுக்கிய தேவனே, எனக்கு நிலையாக ஒரு நிழல் தந்த தேவனே, எல்லாமும் முன்னமே அறிவாயா? அவ்வாறெனின் ஏன் என்னிடம் நீ கூறிவில்லை? தேவனே நீ தந்த இடத்தில் நான் ஒரு பெருங் கற்குவியலிடையே இன்னொரு கல். ஒரு கோடி மின்மினிகளிடையே இன்னொரு மின்மினி; எண்ணி மாளாத தாரகைகளிடையே இன்னொரு தாரகை. என் தனிமையை நீ அறிவாயா? ஒன்றோடொன்று ஒட்ட இயலாத வைரங்களூடு ஒளியைப் பாய்ச்சி வர்ணச் சிதறல்களால் வேடிக்கை காட்டுகிற தேவனே வைரக்கல்லின் தனிமையை நீ அறிவாயா? அதன் வேதனையை நீ அறிவாயா? கடுமையை மீறிய அதன் கண்ணீரை நீ அறிவாயா? ஓய்வின்றி இயங்குகிற எந்திரங்களின் பற் சக்கரங்களின் உயிரற்ற இயக்கத்தை நீ அறிவாயா? இயந்திரப் பேரொலியின் இடையே அவற்றின் அழுகுரலை நீ அறிவாயா?

தீயினின்றுந் தப்பி வந்த என்னை இந்தத் துருவத்துக் கடுங்குளிர் உறையச் செய்கிறது. சுடுசொற்களென எனைச் சூழச் சொரியும் எரிகற்களைக் கண்டு என் மனம் மரத்துப் போயிற்று. என் மண்ணில் ஒரு சொல் மூட்டக் கூடிய நெருப்பின் வெப்பத்தை இந்த வடபுலத்து வானத்தின் நெருப்புக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோளங்களால் ஏன் மூட்ட இயலவில்லை? என்னைச் சூழும் இக் குளிர் உன்னுள்ளும் குடிகொண்டு விட்டதா?

நான் காண்பதெல்லாமென்ன? இதயங் கல்லான பனிப்பாறைகளையும் தங்கள் கடுமையைப் பனிப்போர்வையால் மூடி மறைக்கும் கற்குன்றுகளையும் வடபுலத்து மண்ணுடன் என் உறவை மறிக்கும் பனிப் படலத்தின் எல்லையற்ற விரிவையும் தவிர என் கண்களுக்குத் தெரிவதென்ன? வட துருவ வானிலே வண்ணவொளிகளாய் மாயங் காட்டும் தேவனே, சொல்! என்றுமே எனதாக முடியாத இந்த வடபுலத்து வானவெளி நடுவே என்னை ஏன் கொண்டுவந்து வைத்தாய்?

கணனிகளின் கட்டளைக்கிசைய ஒளிவிடும் உயிரும் உறவுமற்ற வண்ண விளக்குகளின் நடுவே நான் காற்றில் தடுமாறும் ஒரு மெழுகுதிரியின் சுடருக்காக ஏங்குகிறேன்: சாவுக்கும் வாழ்வுக்கும் இடையே தடுமாறும் ஒரு அகல்விளக்குக்காக ஏங்குகிறேன். நடுங்குகிற ஒரு குத்துவிளக்குச் சுடருக்காக ஏங்குகிறேன். எரிகின்ற எனது தேசத்துக்காக ஏங்குகின்றேன். தன் மண்ணிலிருந்து பிடுங்கப்பட்டுக் களிமண் சட்டியில் வைத்துப் பராமரிக்கப்படும் காட்டுச் செடிபோல, என் தாய் மண்ணுக்காக ஏங்குகிறேன்.

என் சகோதரனே என் சிற்றன்னை மகனே, நான் சொல்வதைக் கேள்: அகதி மின்னலின் ஒளியைக் கண்டு பொறாமை படாதே. அந்திய வானில் அகதி நட்சத்திரமும் தடுமாறிப் புரளும் எரிகற் துண்டமும் ஒன்றேதான் நான் ஒளிரவில்லை. எரிகிறேன் என்மண்ணிலிருந்து என்னை விரட்டிய தீ இன்னமும் என்னுள் எரிகிறது அது உன்னையும் எரிப்பதை நீ அறிவாயா? நீ அதை அறியாயெனின் யார் அதை உனக்கு எடுத்துரைப்பார்? பொக்திய கைகள் மூட்டிய பொறாமைத் தீயைப் பொத்தி வைக்கவும் முடியாது, பொத்தி அணைக்கவும் முடியாது. மூட்டிய கைகளையே சுட்டெரிக்கும் தீ அது. இன்று எரிகிற மண் தனியே என் மண்ணுமல்ல, உன் மண்ணுமல்ல. இது எங்கள் மண் இதன் தீயை எங்களால் அன்றி எவரால் அணைக்க முடியும்? எம் மண்ணை எங்களாலன்றி எவரால் மீட்க முடியும்?

என் சகோதரனே, சென்றதை வெறுமனே மறந்து விடுவது தீர்வல்ல, தப்பி ஓடுவது, தவறுகளை அறிவது, தவறுகளினின்று கற்பது, தவறுகளைத் திருத்துவது, தவறுகள் மீள நேராமல் தவிர்ப்பது, இதுவே மீட்சிக்கான பாதை: கல்லும் முள்ளும் நிறைந்த போராட்டப் பாதை. இந்த மண்ணை இந்தத் தீயினின்று உனக்காகவும் எனக்காகவும்





மீட்டாக வேண்டும்: அதைவிட மேலாக எங்கள் எதிர்காலத்தின் குழந்தைகட்காக மீட்டாக வேண்டும்:

ஒரு புதிய தொடக்கத்திற்கான வேளை நெருங்குகிறது: கனல் நெருப்பையும் கடுங்குளிரையும் விட அதிகமாகக் காலம் நம்மை நெருக்குகிறது: சகோதரனே, அன்று கை கோத்து விளையாடிய நாங்கள் ஒன்றாய்க் கைகோர்த்து நடக்க வேண்டிய காலம் நெருங்கி விட்டது. உன் அழைப்புக்காக என் செவிகள் இன்னும் அகலத் திறந்துள்ளன. வட புலத்து வானத்தின் எரிகற்களின் ஓயாத இரைச்சலையும் ஊடுருவி உன் சொற்கள் எழட்டும். முதலில் மெல்லிதாக எழுந்தாலும் மீள மீள உச்சரிக்க அவை உரத்து எழுந்து வான் முகட்டில் எதிரொலித்து வட புலத்தை அடையட்டும்.

எரிகின்ற எமது மண்ணின் ஒவ்வொரு சாம்பற் துளியினின்றும் உயிரை மீள உருவாக்கும் வித்தையை ஒன்றாகப் பயில்வோம், வா!

(துருவன் என்ற இளவரசன் தவம் புரிந்து துருவ நட்சத்திரமாக வானில் அமைந்ததான கதையைச் சார்ந்து எழுதப் பட்டது)

# இருட்டு

எத்தனை
சூரியன்
வந்து போயும்
மனித மனங்களில்
இன்னும் ஏன்
இத்தனை இருட்டு:

கல்விக் கோவிலின்
கற்பக் கிரகமே
வெள்ளைக் கமலமாய்
விரிந்திருக்க
மூலமந்திரத்தை
முற்றாக
மறந்து நாம்
காசுக்காகவே
பூசனை
செய்கிறோம்:

கூனை நிமிர்த்தி
குறைவிலாது
உலகில்
மனிதர் வாழ்தல்
வெறும்
கவிஞர் கனவா!

நீண்டு வளர்ந்தும்
சுருண்டு கிடக்கும்
நிமிர்த்த முடியாத
நாய் வாலா
நம் சமூகம்

இருளகல
எமக்கு
ஏது வழி?

— வித்யா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதி — லூசுன்

# ஓர் ஒப்பியல் நோக்கு

□ க. தணிகாசலம்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

## பத்திரிகையும் எழுத்துப்பணியும்

பாரதியும் லூசுன்னும் இலக்கியத்தையும் பத்திரிகைத் துறையையும் தமது செயற்பாட்டுக்குரிய சாதனங்களாகக் கொண்டமை தற்செயலான தொன்றல்ல. அன்றைய காலனித்துவ பிரபுத்துவ எதிர்ப்புக் காலகட்டத்துக்கு உரிய பொதுமைப்பண்பாக அன்று உலகெங்கும் கிளர்ந்தெழுந்த புத்திஜீவிகள், கலைஞர்களிடம் இது போன்று பல்வேறு உணர்வு நிலைகளிலும் ஒருமைப்பாடு காணப்பட்டது. சமூக விடுதலையை அடிப்படையாக் கொண்ட தேசிய விடுதலையையே இருவரும் தமது குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். இதனால் இவரது பார்வையும் சமுதாய அடித்தளத்தை நோக்கி விரிந்து சென்றது. தேசவிடுதலைக்காக கோடிக்கணக்கான மக்களை விழிப்படைய வைத்து, கொடுங்கோன்மை அரசுகளுக்கு எதிராக அந்த மக்களை அணிதிரட்ட வேண்டிய தேவையை அவர்கள் உணர்ந்தனர். இத்தகைய நோக்குடனேயே கலை இலக்கியத்துறையிலும் பத்திரிகைத்துறையிலும் பணியாற்ற அவர்கள் முன் வந்தனர்.

இத்தகைய நோக்குடன் லூசுன் தனது நண்பர்கள் சிலருடன் சேர்ந்து 1906-ல் 'புதிய வாழ்வு' (Vita Nova) என்ற சஞ்சிகையை வெளியிட முயன்று பணவசதியில்லாமையால் தோல்வி கண்டார். இருந்தும் அவரது சொந்த ஊரைச் சேர்ந்த சூசௌசாங் என்பவரால் வெளியிடப்பட்ட 'சீசியாங் செய்தி, (Zhesiangtide) என்ற இதழில் கட்டுரைகள் பல எழுதினார். 'ஸ்பாட்டாவின் ஆன்மா (Soul of Sparta) எனும் கட்டுரை கி. மு. 480 ஆம் ஆண்டில் கிரிசுக்கும் பாரசீகத்துக்கும் இடையில்' தேடபிலே' என்ற இடத்தில் நடந்த யுத்தத்தில் ஸ்பாட்டன் வீரர்கள் தமது தேசத்தை பாதுகாக்க நடத்திய தீரமும் தியாகமும மிக்க யுத்தத்தை புகழ்ந்து எழுதப்பட்டது. இதன் மூலம் சீனாவில் மஞ்சு அரசவம்சத்தின் ஆட்சியாளருக்கு எதிராக அன்று குடியரசு கோரி எதிர்ப்பியக்கங்களை நடத்திய தேசபக்தர்களுக்கு உற்சாகமூட்டினார்.



1907 ஆம் ஆண்டில் 'கோபாவேசக் கவிஞர்கள்' On the Daemonic poets) எனும் கட்டுரைத் தொகுப்பில் பைரன், ஷெல்லி, ஸ்கொட்ஹொபேட், பேண்ஸ், அலெக்சாண்டர் புஸ்கின், பெட்டோபி போன்றவர்களின் படைப்புக்கள் பற்றியும், வாழ்க்கை பற்றியும் லூசுன் எழுதினார். அவர்களது கவிதைகள் 'மக்களை எழுச்சியுற வைத்து நடவடிக்கைக்கு தூண்டுவதை இலக்காகக் கொண்டவை' என அவர் குறிப்பிட்டார். [14]

1904 ஆம் ஆண்டு நவம்பரில் சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியராக பாரதி இணைந்தார். அக்காலத்தில் மாதர் முன்னேற்றத்திற்காக வெளிவந்த சக்கரவர்த்தினி என்ற மாதப் பத்திரிகைக்கும் அவர் ஆசிரியராக இருந்தார். காங்கிரஸ் கட்சியில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டில் தீவிரப் போக்கைக் கடைப்பிடித்த திலகரின் அணியில் பாரதி இணைந்து நின்றார். இதனால் 1906 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இந்தியா என்ற வாரப் பத்திரிகைக்கு ஆசிரியரானார். 1907 ஆம் ஆண்டில் பாலபாரதா என்ற ஆங்கிலப் பத்திரிகைக்கும் ஆசிரியரானார்.

இப்பத்திரிகைகளில் தேசவிடுதலைக்கு உரமூட்டும் வகையில் உலக நாடுகளில் நடைபெற்ற விடுதலைப் போராட்டச் செய்திகளுக்கும் அவர் முதன்மை அளித்தார். மேலைத்தேச மொழியையும் கல்வியையும் பயின்று எதற்கும் மேலைத்தேச ஆதிக்கக் கருத்துக்களையே முன்னுதாரணமாகக் கொள்ளும் அன்றைய பெரும்பாலான புத்திஜீவிகளைப் போலன்றி ஆசிய நாடுகளின் சிறந்த பண்புகளை வரவேற்று, அதன் விடுதலையிலும் வளர்ச்சியிலும் பாரதி மிகுந்த அக்கறை கொண்டிருந்தார்.

### (1) சீனா பற்றி பாரதி

'மேலை நாடுகளுக்கு மட்டுமன்றி ஜப்பான், சீனா முதலிய தேசங்களுக்கும் நம்மவர்களில் நூற்றுக்கணக்கான மனிதர்கள் போகவேண்டும. வாலிபர் மட்டும் போவதில் உபயோகமில்லை முதியோர்களும செல்ல வேண்டும். அந்நாடுகள் அபிவிருத்திக்கு என்ன உபாயங்கள் தேடுகின்றன என்பதை நேரே கற்றறிந்து வரவேண்டும்.' [15]

என்று அவர் குறிப்பிட்டதுடன் சீனதேசத்துக்கு அந்நிய நாடுகள் இழைத்த கொடுமைகளையும், அதற்கெதிராகப் படிப்படியாக அது விழிப்படைந்து வந்தமையையும் குறிப்பிடுகிறார்;

'சீனா பெரிய ராட்சதன். ஆனால் துர்க்குணமுடைய ராட்சதன் அன்று ஆரம்பத்தில் சீன யப்பானிய யுத்தத்தின் போது யப்பான் சீனாவைக் கிள்ளியும் அடித்தும் பலபந்தமாய் இம்சைகள் செய்தது அதற்கெல்லாம் சீனக் கும்பகர்ணன் எழுந்திருக்க வில்லை. பிற ஐரோப்பிய ராஜாங்கத்தார் எல்லாம் வந்து சீனாவை எதிர்த்து அநீதிகள் செய்த காலத்தில் சிறிது கண்ணைத்திறந்தது. அப்பால் ருஷ்ய யப்பானிய போரின் போது யப்பானிய குண்டுகள் காதில் பட்ட உடனே நன்றாக விழித்து உட்கார்ந்து கொண்

இவ்வாறு சீனாவின் வரலாற்று எழுச்சியை சுருங்கக் கூறிய அவர் அங்கு நடந்த விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு உயிர்துறந்த சியூசின் என்ற பெண்கவியின் தீரச் செயல் பற்றியும் எழுதினார். பாரதியால் குறிப்பிடப்பட்ட சியூஸின், லூசுன்னின் பிறப்பிடமான சாவீகாங்கிலிருந்தே யப்பானுக்கு கல்வி பயிலச் சென்றிருந்தாள். சூசிலின் என்ற விடுதலை வீரரும் பக்கத்து ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டிருந்தார். சன்யாட் சென் அவர்களால் 1905ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட (Tong Meng Hui) சமூக உடன்பாட்டு இயக்கத்தில் யப்பானில் கல்வி கற்ற சீன மாணவர்கள் இணைந்திருந்தனர். சியூசின்னும், சூசிலினும் 1905 - ஆம் ஆண்டு சீனா திரும்பி மஞ்சு அரசுக்கெதிரான ஆயுத நடவடிக்கையின் போது கொல்லப்பட்டனர். சியூசின் என்ற இப்பெண்கவியின் தீரச்செயல்பற்றி சியூசின் என்ற சீனத்து ஸ்திரீயின் கதை என்ற தலைப்பில் பாரதியார் குறிப்பிடுகிறார்.

'இவள் தன் ஜன்மஸ்தானமாகிய சாவ்சிங் நகரத்துக்கு மீண்டும் வந்து அங்கே ஒரு பாடசாலை நடாத்தினாள். ஆனால் அது வெளிக்கு பாடசாலையாகவும் உண்மையில் குடியரசுப் படைப் பயிற்சிக்கூடமாகவும் நடைபெற்றது. மாணக்கரெல்லாம் படையாட்களாகப் பயிற்சி பெற்றனர்.

ஒரு நாள் மஞ்சுப்படை நகருக்குள் புகுந்துவிட்டது ... இவளைத் தப்பி ஓடும்படி சொல்லினர். இவள் மறுமொழி கூறவில்லை. மஞ்சுப்படை கலாசாலையில் வந்து நின்றது அப்போது நடந்த போரில் மஞ்சுப்படையாளர் பலர் கொலையுண்டும் பண்பட்டும் வீழ்ந்தனர். மாணாக்கரிலும் இருவர் மாண்டனர். உள்ளே ஓரறையில் வீற்றிருந்த சியூசினையும் அவருடன் அறுவரையும் படை கைதாக்கிற்று. இவருக்கு கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஜூலை 15-ந் தேதி சூர்யோதய வேளையில் இவள் சாவ்சிங் நகர மண்டபத்தருகே தூக்குண்டாள். அத்



தருணத்தில் இளஞ்செந்நிறமுடைய மேகமொன்று இவளுடைய ஆவியைப்போலே வானத்தில் பறந்ததென்றும் குளிர்ந்த வாடை வீசிற்றென்றும் தூக்கிட்டோரும் பார்த்து நின்றோரும் துக்கத்தால் நடுங்கினரென்றும் ஆனால் சியூசின் பரிபூரண சாந்தியுடன் தூக்கு மரத்துக்குச் சென்றாளென்றும் — 17

மொழிபெயர்ப்புக் கட்டுரை மூலம் பாரதி குறிப்பிடுகிறார். மேலும் 'சியூசின் என்ற சீனத்து ஸ்திரி செய்த பிரசங்கம்' என்ற தலைப்பில் அவரது பெண்விடுதலைக் கருத்துக்களையும் 'பெண் விடுதலை' என்ற தலைப்பிலான 'விடுதலைக்கு மகளிரெல்லாம் வேட்கைகொண்டனம்' என தொடங்கும் கவிதையாக பாரதி தமிழாக்கம் செய்துள்ளார்.

சியூசின்னின் மரணம் பற்றி லூசுன் யப்பானில் தாங்கள் அறிந்து கொண்டதும் மிகுந்த வேதனையும், கோதிப்பும் அடைந்தது பற்றி தமது கட்டுரையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

'செல்வி சியூசின் சாவ்சிங்கில் தூக்கிலிடப்பட்டாள் என்றும் சூசிலினது இருதயத்தை கிழித்து என்மிங்கின் (சூசிலின்னால் சுட்டுக்கொல்லப்பட்ட மாகாண ஆளுநர்) மெய்ப்பாதுகாவலர்கள் வறுத்து உண்டார்கள் என்றும் எமக்கு செய்தி எட்டியதும் நாங்கள் மிகுந்த கோதிப்படைந்தோம். வழமை போல மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் யாவரும் ஒன்றுகூடி தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியதுடன் மஞ்சு அரசைக் கண்டித்து கூட்டம் நடாத்தினோம்.' 18

இச்சம்பவங்களின் பின் 1909 ஆம் ஆண்டு சீனா திரும்பிய லூசுன் அவர்கள் அயல்மாகாணத்தின் தலைநகரான காங்சோவில் பள்ளி ஆசிரியராகக் கடமையாற்றினார். சன்யாட்சென் தலைமையில் 1911ஆம் ஆண்டு நடந்த குடியரசுக்கான புரட்சியை ஆதரித்து அப்புரட்சியில் பங்குபற்றுமாறு மாணவர்களை ஊக்குவித்தார். இரண்டாயிரம் ஆண்டுகால நிலப்பிரபுத்துவ ஆட்சிக்கு இப்புரட்சி முடிவு கட்டியது. ஆனாலும் தனது இலக்கை அடையாமலே யுத்தப்பிரபுக்களின் கையில் அதிகாரத்தை மீண்டும் இழந்து தோல்வி கண்டது. பாரதி ஆசிரியராக இருந்த 'இந்தியா' பத்திரிகையின் குறிக்கோள் வாசகமாக இருந்த 'சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம்' என்பதையே சீனாவில் நடைபெற்ற அக்குடியரசுப் புரட்சியும் இலக்காகக் கொண்டிருந்தது. அப்புரட்சி பற்றி பாரதி சரியான அரசியல் கணிப்பீட்டைச் செய்து அப்பத்திரிகையில் 'தராசு' என்ற பகுதியில் இவ்வாறு குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'புவான்சிகாய் - சீனதேசத்துக் குடியரசுத்தலைவர் காயாக இருந்தவர் பழுத்துக் கொண்டு வருகிறார்? பூர்வ ராஜவம்சத்தை ஒழிப்பதற்கு பகீரதப் பிரயத்தனங்கள் செய்து சீனதேசத்தார் குடியரசு நாட்டினார்கள். யுவான்சிகாய் பக்கம் சேனாபலம் இருந்தபடியால் அந்தக் குடியரசுக்கு இவர் தலைமை பெறுதல் சுலபமாயிற்று; நாட்பட நாட்பட வெகு சீக்கிரத்தில் யுவான் மனதில் குடியரசைவிட ராஜாதிகாரமே சீனத்துக்குப் பொருத்திய ஏற்பாடாகுமென்று உதயமாயிற்று எனவே சீனா தேசத்துக் குடியரசு இன்னும் எவ்வளவு காலம் ஜீவித்திருக்கும் என்பதை, நமது தேசத்து ஜோதிடர்கள் கண்டுபிடித்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்கின்றேன்.' 19

பாரதியின் கணிப்பீட்டை உறுதிப்படுத்துவதுபோலவே யுவான்சிகாயின் வீழ்ச்சியுடன், கன்பூசியஸின் கருத்துக்களின் வீழ்ச்சியையும் இணைத்து லூசுன் தனது கட்டுரையில் குறிப்பிடுகிறார்:

'இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இன்று வரை கன்பூசிசஸ் அதிஷ்டத்தை இழந்துவிட்டார். ஆனால் யுவான்சிகாயின் காலத்தில் அவர் மீண்டும் ஒரு முறை நினைவுறுத்தப்பட்டார். அவரது அர்ப்பணிப்புகள் மீண்டும நிலைநாட்டப்பட்டன. ஆனால் இயற்கையில் இல்லாத புதிய உடைகள் அர்ப்பணிப்புச் செய்பவர்களுக்கு வடிவமைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து முடியாட்சியை மீள நிலைநிறுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது: கதவு திறக்கப்படவில்லை. ஆயினும் யுவான்சிகாய் அதற்கு வெளியே இறந்து கிடந்தார்' 20

தொண்ணூறு நாட்கள் வரை நீடித்த முடியாட்சி மீண்டும் யுத்தப் பிரபுக்களின் கைகளுக்கு மாறியது. குடியரசுப் புரட்சி தொடர்ந்தும் பயனற்றுப் போனது பற்றி லூசுன் குறிப்பிடும் போது;

'சீனப் பேரரசு குடியரசாக மாறிய பின்னும் மேல் தட்டு வர்க்கத்தாரிடம் சிறிதும் மாற்றம் ஏற்படவில்லை. எமது படிப்பறிவற்ற ஏழை விவசாயிகளும் ஒரு சிறிதளவாவது நன்மையையும் பெறவில்லை. அதே பழைய, மூடநம்பிக்கைகளுக்கும், ஏமாற்றுக்கும் தொடர்ந்தும் உட்பட்டுள்ளார்கள்' 21 என்றும்,

'எங்களது தலைமுடிகளை வெட்டும் சுதந்திரத்தை நன்கு பாதுகாக்கும் செயலொன்றே நான் சீனக் குடியரசை நேசித்தற்கான பிரதான காரணம்' 22 எனவும் குறிப்பிட்டார்.



காலனித்துவ பிரபுத்துவ எதிர்ப்புக் காலகட்டத்தில் மக்களின் கலாசார நடை, உடை, பாவனை, சிந்தனை முறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை அவதானித்த பாரதியின் பார்வையில் லூசுன் குறிப்பிட்ட சீனத்து தலைமுடியும் தப்பவில்லை.

'சிறிது காலத்துக்கு முன்புவரை சீனா தேசத்தவர் 'பன்றி வால், என்றுசொல்லப்படும் தமது நீளக்குடுமியை வைதிகமாகவும், அதனை வெட்டி எறிதல் பெரும் பாபமாகவும் கருதி வந்தார்கள். சில வருடத்துக்கு முன்பு அந்த நாட்டில் ராஜவம்சத்தின் ஆட்சி அழிந்து போய், குடியரசு ஸ்தாபனம் செய்யப்பட்ட போது, பதினாயிரம் லட்சக்கணக்கான சீனர்கள் ஏககாலத்தில் குடுமிகளை வெட்டி எறிந்தனர் அந்த ரோமங்கள் ஆயிரக்கணக்கான வண்டிகள் நிறைய ஏற்றப்பட்டு வியாபாரத்துக்காக பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.' 23 என்று குறிப்பிட்டுள்ளார் பாரதி.

(வளரும்)

## அடிக் குறிப்புக்கள்

14. Luxun, A Chines Writer For All Times. Op. Cit, p 33
15. பாரதி தரிசனம். இளசை மணியன், பக் 145
16. மேற்படி பக். 144
17. பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பதிப்பகம் சென்னை 1988 பக் 131
18. Luxun Selected Works Vol. I, Foreign Languages Press, Beijing. 1980. p 418
19. பாரதி நூல்கள் (வசனங்கள்) பாரதி பிரசுராலயம், பக். 183
20. Luxun Selected works, Vol. IV p.186
21. Ibid, p 98
22. Luxun. A Chinese Writer For All Times Op. cit p. 40
23. பாரதியார் கட்டுரைகள் பக். 120



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படைப்பாளியும் படைப்பும்

ஆங்கில மூலம் : Anne Bradstreet (17-ம் நூற்றாண்டு) தமிழாக்கம் : சோ. ப.

என் நலிந்த மூளையில்
அரைகுறையாய் உருவாகி,
பிறந்து
நண்பர்கள் தூக்கும் வரை
என் அருகே கிடந்து,
அவர்கள் கவனக் குறைவால்
பலர் தோளுக்குத்தாவிய பின்
நின்று, ஓய்ந்து,
அச்சகம் போய்ச் சேர்ந்து—
அங்கும் பிழைகள் மலிய
நீ மீண்ட போது
நான் அடைந்த வெட்கம்;

ஊர்சுற்றி வந்த என் 'வம்பு'
என்னை 'அம்மா' என்றழைப்பதாவது!
உன்னை ஒதுக்கி ஒரு மூலையில் விடுகிறேன்
உன்முகத்தை பார்க்கையில் சங்கடப்படுகிறேன்
என்றாலும் நீ என்னவன் என்பதால்
காலப்போக்கில்
என் அன்பு
உன் களங்கங்களை மறைக்கும்;

உன் முகத்தைக் கழுவியபோது
மேலும் மறுக்கள் தெரிந்தன;
ஒரு மறுவைத் துடைக்கப் போய்
உள்ளதையும் கெடுத்தேன்
பாதங்களைச் சம நீளமாக்க
மூட்டுக்களை வசைத்தேன்
அதன் பின்னும்
நீ தாண்டித் தாண்டி நடந்தாய்;

உனக்கு நல்ல ஆடைகள் அணிய ஆசைப்பட்டேன்
ஆனால் என் கைக்ககப்பட்டதோ -
கைத்தறித் துணிதான்;
இந்தக் கோலத்தில் ,கண்டதுக' ளிடையே
நீ அலையலாம்
ஆனால் விமர்சகர் கைகளில் மட்டும் சிக்கிவிடாதே;
அறியப்படாத இடமெல்லாம் சென்றுவா
அப்பன் யார் என்றால் இல்லை என்றுசொல்;
அன்னையோ, பாவம் வறியவள் ஆதலின்
உன்னை இவ்வாறு அனுப்ப நேர்ந்தது.



# யூரோ நாணய தோற்றமும் அதன் பொருளாதார முக்கியத்துவமும்

○ பசுபதி சிவநாதன்

பிரான்ஸ், மேற்கு யேர்மனி, பெல்ஜியம், லக்சம்பேக் இத்தாலி நெதர்லந்து ஆகிய ஆறு ஐரோப்பிய நாடுகள் 1957-ம் ஆண்டு ரோமில் கைச்சாத்திட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஐரோப்பிய பொருளாதார சமூகப் (EEC) தோற்றம் பெற்றது. பொருளாதார கூட்டுறவை அங்கத்துவ நாடுகளிடையே பரஸ்பரம் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் EEC செயற்பட்டது. இவ்வமைப்பு 1967-ல் ஐரோப்பிய சமூகம் என பெயர் மாற்றிக் கொண்டது (EC). 1973-ல் பிரித்தானியா, அயர்லாந்து டென்மார்க் போன்ற நாடுகளும் EC யில் சேர்ந்துகொண்டன. 1979-ல் பிரித்தானியா தவிர்ந்த ஏனைய அங்கத்துவநாடுகள் ஐரோப்பிய நாணய முறை என்ற அமைப்பைத் தோற்றுவித்து நாணயரீதியால கூட்டுறவொன்றை ஏற்படுத்தும் நோக்குடன் செயற்பட்டது. 1981-ல் கிறீஸ் நாடும் EC யுடன் சேர்ந்து கொண்டது. 1982-ல் ஐரோப்பிய சமூக நாடுகளின் தலைவர்கள் கூடி தமக்கென தனியானதொரு சந்தையை 1992-ல் உருவாக்கிவிட வேண்டும் என திடசங்கற்பம் பூண்டனர். 1986-ல் ஸ்பெயின் போத்துக்கல் ஐரோப்பிய சமூகத்தில் சேர்ந்து கொண்டது. 1990-ல் கிழக்கு யேர்மனி மேற்கு யேர்மனியுடன் சேர்ந்ததோடு ஐரோப்பிய சமூக நாடுகளின் எல்லை விரிவடைந்தது. 1995-ல் சுவீடன், பின்லாந்து ஆஸ்திரியா போன்ற நாடுகளும் இவ்வமைப்பில் தம்மை இணைத்துக் கொண்டன. இன்று மொத்தமாக 15 நாடுகள் இதில் அங்கம் வகிக்கின்றன.

> சமூக விஞ்ஞான வட்டத்தின் 13 வது கலந்துரையாடலில் ஆற்றிய உரை கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளது.

1992 ல் மான்றிற்ச் ஒப்பந்தத்தில் ஐரோப்பிய யூனியன் நாடுகளான 15 நாடுகளும் தனிஒரு நாணயம் வேண்டும் என்பதைக்

கொள்கை அளவில் ஒப்புக் கொண்ட இவ் வொப்புதல் ஒவ்வொரு தனிநாட்டினதும் வெளிநாட்டுக் கொள்கையாகவும் வெளிநாட்டு வர்த்தகக் கொள்கையாகவும் இருப்பதற்கு இம் மாநாட்டில் சம்மதம் தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக 1. 1. 1999 ல் இந்நாடுகளின் புழக்கத்திற்கு தனிநாணயம் ஒன்று வெளியிடப்பட்டது இந் நாணயத்தை அங்கத்துவ நாடுகளான பிரித்தானியா டென்மார்க், சுவீடன் ஆகிய மூன்று நாடுகளும் ஏற்றுக்கொள்ளவில்லை. கிரீஸ்நாடு இத்தனி நாணயப் பயன்பாட்டிற்கான தகுதியை இன்னும் பெறவில்லை என்று விலக்கிவைக்கப்பட்டுள்ளது. 1. 1. 1999 ல் சட்டரீதியான தனிநாணயமாக ஏற்றுக் கொள்ளப்பட்டதும் ஒவ்வொரு தேசிய பொருளாதாரங்களிலும் வங்கிகள், நாணய இருப்புக்கள், வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்கள் யூரோவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. 1.1.2002 - ல் இந்நாணயத்தை ஏற்றுக் கொண்ட ஐரோப்பிய யூனியன் நாடுகளின உள்நாட்டுப் புழக்கத்திற்கும் யூரோ நாணயமே பயன்படுத்தப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. முடிவாக 1. 8. 2002 – ல் முன்னர் புழக்கத்திலிருந்த தேசியநாணயங்கள் முற்றாக நீக்கப்பட்டு முழு அளவில் யூரோநாணயமே புழக்கத்திலிருக்கும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

யூரோ நாணயம் தனியொரு நாணயமாக இந்நாடுகளில் இருக்க வேண்டும் என்பனதற்கான அடிப்படை நியாயமாக பின் வருவன குறிப்பிடப்படுகின்றது.

1. இப்பிரதேசங்களில் தடையற்ற பொருள் நுகர்வு இருப்பது எல்லாப் பொருளாதாரங்களிலும் அபிவிருத்தியை விரைவு படுத்தும்

2. தடையற்ற ஊழிய நகர்வு இப்பகுதிகளில் ஊழியப்பற்றாக் குறையை நீக்குவதோடு வேலையின்மையுள்ள நாடுகளின் பிரச்சனையைக் குறைப்பதோடு வேலையின்மையால் தடைப்பட்ட பொருளாதார அபிவிருத்தியை மீண்டும் ஏற்படுத்த முடியும்.

3. தடையற்ற சேவைகள் நகர்வு இப்பிதேசங்களில் இருக்கும் போது உற்பத்தித்திறன் அதிகரிக்கும் இதனால் இப்பிரதேச நாடுகள் சமவளர்ச்சி வீதத்தை அடைந்து கொள்ள முடியும.

4. தடையற்ற முதல் நகர்வு இருக்குமானால் முதலீட்டால் தடைப்பட்ட சிறிய நாடுகள் அப்பிரச்சனையிலிருந்து விடுபட்டு விடும். அத்துடன் எல்லா நாடுகளின் வளர்ச்சி உறுதியானதாகவும் விரைவு படுத்தப்பட்டதாகவு மிருக்கும்.

5. ஐரோப்பாவிற்குள் வர்த்தகத்தையும் முதலீட்டையும் இலகுவாக்குவதற்கு தனியொரு நாணயம் அவசியமென உணரப்பட்டது.



6. அமெரிக்க டொலருக்குச் சமாந்திரமாக ஐரோப்பாவிற்கு தனியொருநாணயம் உலகப் பொருளாதாரத்தில் அவசியமென கருதப்பட்டது.

(1971-ல் ஏற்பட்ட டொலர் நெருக்கடி உலகப் பொருளாதாரத்தைப் பாதித்தது. டொலரே சர்வதேச நாணயங்களில் கூடியளவு புழக்கத்திற்கும் இதுக்கிற்கும் பயன் படுத்தப்பட்டதால் டொலர் நெருக்கடிக்குள்ளான போது உலகப் பொருளாதாரம் பாதிப்புக்குள்ளாகியது. இவ்வித பிரச்சனைகள் இனி மேலும் ஐரேப்பியப் பொருளாதாரத்தைப் பாதிக்காவண்ணம் தடுப்பதற்கு யூரோவை சர்வதேச பெறுமதி நாணயமாக இருக்க வைக்க வேண்டும் என கருதப்படுகிறது.)

7. ஐரோப்பாவில் தனியொரு நாணயம் இருப்பதால் பொருளாதார விடயங்களில் கூட்டான முடிவுகளை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுவதுபோல இந்நாடுகளிடையே தனிநாணயப் பயன்பாடு அரசியல் ஒருங்கிணைப்பையும் ஏற்படுத்த முடியும் எனவும் நம்பப்படுகிறது.

யூரோநாணயத்தின் அளவு அதன் பெறுமதி அதுசார்ந்த நாணயக் கொள்கை போன்றவற்றை வகுக்கக் கூடிய ஐரோப்பிய மத்திய வங்கி 1998 ல் ஆரம்பிக்கப்பட்டது. இதில் தேசிய பொருளாதாரங்களில் உள்ள மத்திய வங்கியின் ஆளுனர்கள் 11 பேரும் ஐரோப்பிய நாணய யூனியன் அமைப்பிலிருந்து தலைவர் உபதலைவர் மற்றும் 4 பேரும் இருப்பர். மேலும் வங்கி அனுபவமுடைய 6 உயர் நிலை நிர்வாக உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட்டனர். இவ்வங்கத்தவர்களைக் கொண்ட நாணயச் சபையின் முடிவுகளே நாணயக் கொள்கையாக முன்வைக்கப்படுகிறது. இம் மத்திய வங்கியால் வகுக்கப்படும் நாணயக்கொள்கை ஐரோப்பிய நாணய யூனியனின் கொள்கையாகவுமிருந்தது. குறிப்பாக ஐரோப்பிய யூனியன் அங்கத்து நாடுகளில் இருக்க வேண்டிய வட்டி வீதம், யூரோவின் பெறுமதியில் காணப்படும் உறுதித் தன்மை, யூரோ சில்லறை நாணயங்கள், நோட்டுக்களின் அளவுகள், யூரோவின் பண நிரம்பல், நாணயத்திரவத்தன்மையை ஒழுங்கு படுத்தல், இந்நாடுகளிடையே குறைந்த பணவீக்கமட்டத்தை ஏற்படுத்தல் போன்றவற்றை மேற்பார்வை செய்வதோடு பொருளாதார வளர்ச்சியை நோக்காகக் கொண்டு செயற்பட வேண்டிய அவசியமும் ஏற்பட்டது.

இவ் ஐரோப்பிய யூனியன் மத்தியவங்கி அங்கத்துவ நாடுகளின் அரசியல் தலையீடு எதுவுமின்றி சுதந்திரமாக செயற்படக்கூடிய சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரோ நாணயப் புழக்கம் உள்ள நாடுகளில் குறைந்த பண வீக்கம் இருக்க வேண்டும். பணவீக்கம் 1.5% மேற்படாது இருத்தல் அவசியம், அவ்விதமே வரவு செலவுத்திட்டத்தின் குறைநிலை அந்தந்தநாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 3% மேல் இருக்கக் கூடாது. ஒவ்வொரு நாட்டிலும் நீண்டகால வட்டி வீதம் 2% குறைவாக இருக்க வழி செய்ய வேண்டும். தற்போதுள்ள 8% - 10% உள்ள வேலையின்மை வீதம் 4% மளவிற் குறைக்கப் பட வேண்டும் என ஐரோப்பிய நாணய யூனியன் 'மாற்றிற்ச்' உடன்படிக்கைக்கு அமைவாக தீர்மானங்களை எடுத்தது. இத்தீர்மானங்களில் இந்நாடுகளின் முன்னேற்றகரமான பேரினப் பொருளாதாரச் சூழல்தொடர்ந்து இருக்க வேண்டும் எனக்கருதப் படுகின்றது. அச்சந்தர்ப்பங்களில் நாணயப் பெறுமதியையும் நாடுகளில் விலையையும் உறுதிப்படுத்த முடியும். அத்துடன் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும் எனக் கருதப்படுகின்றது. பொருளாதாரக் கொள்கை நோக்கில் நாணய நடைமுறைக் கொள்கையும் அரசாங்க வரவு செலவுத்திட்டக் கொள்கையும் அதாவது இறைக் கொள்கையும் இப்பிரதேசங்களில் நிச்சயமற்றத்தன்மையை நீக்கி விரைவான அபிவிருத்திக்கு வழியை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது.

யூரோ நாணயத்தை அங்கத்துவ நாடுகள் தமது நாணயமாக ஏற்றுக் கொள்வதனால் அதிக பலனடைய முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது.

1. குறித்த நாடு பொருளாதாரப் பலத்தை பெறமுடியும். ஒன்றிணைந்த பொருளாதாரச் சூழலால் உள்நாட்டில் பொருளாதார உறுதிப்பாட்டை ஏற்படுத்தலாம். விரைவான வளர்ச்சியையும் ஏற்படுத்தலாம். அதிக வேலை வாய்ப்பை உருவாக்கலாம். அதாவது வேலையின்மையைக் குறைக்கலாம்.

2. விலையை உள்நாட்டில் உறுதிப்படுத்தலாம் அதனால் வர்த்தகத்தில் அதிகரிப்பை ஏற்படுத்தலாம். இது ஐரோப்பாவிற்கும் சந்தைத் திறமையை உருவாக்கும். இது சந்தையில் போட்டியையும் வளர்க்கும்.

3. விலையை உறுதிப்படுத்துவதனூடாக முதலீட்டிற்கான நல்ல சூழ்நிலையைத் தோற்றுவிக்கலாம். இதனால் முதலாக்கம் ஏற்படும்.

4. முதலீடு, மற்றும் தொழில் முயற்சிகளில் ஏற்படும் ஆபத்தும் குறைக்கப்படும். செலவும் குறைக்கப்படும். அதாவது ஒரு நாணயமாக இருப்பதால் இது வரை அந்நாடுகளில் காணப்பட்ட நாணயமாற்று வீதத் தளம்பலால் ஏற்படும் ஆபத்தும் அதனால் ஏற்படும் செலவும் நிச்சயமற்ற தன்மையும் குறைக்கப்படும். இதனால், நாடுகளில் பொருளாதாரம் விரைவான வளர்ச்சிக்கு உட்படும்.



5. சிறிய நாடுகள் அதாவது குறைந்தளவு உறுதிப்பாடுடைய நாடுகள் ஐரோப்பிய நாணய யூனியனின் பங்கான நாடுகளாக இருப்பதால் இணைக்கப்பட்ட வலிமையும் பாதுகாப்பையும் யூரோ மூலம் பெறுவர்

6. ஒரே நாணயமாக இருப்பதால் ஐரோப்பிய யூனியன் நாடுகளிடையே அரசியல் கூட்டுறவு ஏற்படும்.

7. ஆவணச்சந்தையிலும் பங்குச் சந்தையிலும் யூரோ நாணயத்தின் உறுதிப்பாடு அங்கத்துவ நாடுகளிற்கு நன்மையளிக்கும்.

ஐரோப்பிய யூனியனில் அங்கம் வகிக்கும் நாடுகளில் 371.8 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். யூரோ நாணயத்தை ஏற்றுக் கொண்ட 11 நாடுகளில் மாத்திரம் 289. மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். இது உலக சனத்தொகையில்5 % மாகும். இவர்களிடையே யூரோ நாணயப் புழக்கம் முதலில் நடைபெறும் அமெரிக்காவின் 263 பில்லியன் மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது இது சற்று அதிகமானதே. உலகப் பொருளாதார மொத்த வெளியீட்டில் 20% யூரோ நாணயப் பிரதேசத்தில் நடைபெறுகின்றது. இந்நிலை இந்நாணயப் புழக்கத்தை விரைவுபடுத்தும். உலக வர்த்தகத்தில் இந்நாடுகளின் பங்கு 28-9% மாகக்காணப்படுகிறது. அமெரிக்காவின் உலக வர்த்தகப் பங்கு 14.8% காணப்படுவதனால் நேரடியாக வர்த்தகம் செய்யும் நாட்டின் நாணயப் பரிமாற்றம் என்ற அடிப்படையிலும் 11 நாடுகளின் வர்த்தகப் பங்கு யூரோ நாணயத்தின் பயன்பாட்டை பரவலாக்கும் என்பதில் ஐயமில்லை. இந்நாடுகளின் சர்வதேச ஒதுக்கு 290 பில்லியன் அமெரிக்க டொலராக இருக்கிறது. இனிமேல் இது யூரோ நாணயமாக மாற்றப்படும். இவ்வொதுக்குகள் அமெரிக்காவின் 58 பில்லியன் ஒதுக்கைவிட பன்மடங்கானது. அத்துடன் யூரோ நாடுகளின் ஏற்றுமதியில் 40% - 50% மானவை ஆபிரிக்க நாடுகளிற்கே என்ற வகையில் அதிகம் போக்குவரத்துச் செலவில்லாத அயற் கண்டத்தில் நடைபெறுவதால் ஏற்றுமதிகள் மற்றைய நாடுகளிற்கு மலிவாகவும் இருக்கும். பணவீக்கம் மிகக்குறைவாக இருப்பதும் வட்டி வீதம் குறைவாக இருப்பதும் யூரோ நாடுகளின் ஏற்றுமதி ஒப்பீட்டுரீதியில் மிகமலிவாக இருப்பதற்கு சந்தர்ப்பங்கள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிலை சர்வதேச நாடுகளில் யூரோவின் பயன்பாட்டை அதிகரித்து விடும். இது அமெரிக்க டொலருக்கு பெரும் சவாலாக அமைந்துவிடும்.

1997-ம் ஆண்டு IMF ன் மதிப்பீட்டின்படி யூரோ நாடுகள் 195 பில்லியன் டொலர் பெறுமதியான பொருட்களை ஆசிய நாடுகளிற்கு ஏற்றுமதி செய்தது. அவ்வேளை ஆசிய நாடுகள் 190 பில்லியன் டொலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்தது. இது யூரோ நாடுகளிற்கும் அமெரிக்காவிற்குமிடையிலான வர்த்தகப் பெறுமதியை விட உயர்வானது. இலங்கை தனது ஏற்றுமதியில் 17% யூரோ நாடுகளுக்கு வழங்க 10% இறக்குமதியை இந்நாடுகளிலிருந்து பெறுகிறது. இலங்கைக்கான வெளிநாடுகளின் முதலீட்டிலும் 6% பங்கை யூரோ நாடுகள் மேற்கொள்கின்றன. இலங்கை போன்ற சிறிய நாடுகளின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஓரளவு பங்கு இருப்பது போல மூன்றாம் உலக நாடுகளின் சர்வதேச வர்த்தகத் தொடர்புகளிலும் முதலீடுகளிலும் வெளிநாட்டு உதவிகளிலும் யூரோவின் பயன்பாடு அதிகரிக்கும் சாத்திய நிலை காணப்படுகிறது. சீனா, இந்தியா பாகிஸ்தான் போன்ற நாடுகள் தங்களது வெளிநாட்டு இருப்புக்களை யூரோவில் வைத்திருப்பதற்கு முன் வந்துள்ளனர். இந்நாடுகள் தங்களுக்கு யூரோ நாடு சந்தையாக மாறக்கூடும் என்ற வகையிலும் மிகக் குறைந்த வட்டியில் யூரோ கடன்களைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையிலும் யூரோ நாடுகளோடு தொடர்புகளை ஏற்படுத்த முனைகின்றன. இவ்விதமே கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் மேலும் 10 நாடுகள் யூரோ நாடுகளோடு சேர்வதற்கு விண்ணப்பித்துள்ளன. யூரோ நாடுகள் இந்நாடுகளில் உள்ள பணவீக்கம் குறைக்கப்பட வேண்டும். வேலையின்மை வீதம் குறைக்கப்பட வேண்டும் நீண்ட கால வட்டி வீதம் குறைக்கப்பட வேண்டும். வரவு செலவுத்திட்டத்தரை நிலை குறைக்கப்பட வேண்டும் அதன் பின்னரே யூரோ நாடுகளோடும் யூரோ நாணய யூனியனிலும் சேர்வதற்குத் தகுதி உடையது என குறிப்பிடுகின்றது. இவை எல்லாவற்றையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது யூரோ நாணயம் விரைவில் உலகில் பெறுமதி வாய்ந்த நாணயமாக மாறிவிடும் சூழ்நிலை காணப்படுகின்றது

ஐரோப்பிய யூனியன் அங்கத்துவ நாடுகளில் பிரித்தானியாவும், சுவீடனும், டென்மாக்கும் யூரோ நாணயத்தை இன்னும் ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் தங்கள் நாட்டுமக்களின் ஒப்புதலுடனே இதைச் செய்ய வேண்டியிருப்பதால் ஒப்புதல் வாக்கெடுப்பு நடைபெற வேண்டும். மக்களின் விருப்பிற்கு ஏற்பவே யூரோவை பயன்படுத்த முடியும் என கூறுகின்றன. இன்றைய நிலையில் மக்களும் யூரோவை விரும்பவில்லை போல் தெரிகிறது. இருந்த போதும் பிரித்தானியா தனது ஸ்ரேலின்பவுண் நாணயத்தை இழக்க விரும்பவில்லை சர்வதேச நிதிச்சந்தை, ஆவணச் சந்தைகளில் ஸ்ரேலின்பவுணுக்கு நல்ல மதிப்பு இருப்பதால் அதைவிட்டு வேறொரு நாணயத்தை ஏற்றுக் கொள்ளத்தயக்கம் காட்டுகிறது. உலக வர்த்தகத்தில் ஸ்ரேலின் பவுண் பெற்ற மதிப்பை இழந்தால் பிரித்தானியா பொருளாதார நெருக்கடியைச் சந்திக்க நேரும் என தனியே நின்று முடிவெடுப்பதால் ஐரோப்பிய யூனியன் முடிவுகளுக்கு ஒத்துப் போகாத நிலையும் காணப்படுகிறது. இது இனிவரும் காலத்தில் பிரித்தானியா யூனியனிலிருந்து விலகிவிடும் வாய்ப்பை உருவாக்கும். ஆனால் பிரித்தானியப் பொருட்களிற்கான சந்தை ஐரோப்பாவில் இருப்பதால் தனித்து இருப்பதென்பது சாத்தியமில்லை.

கிறீஸ் உடனடியாகவே யூரோநாணயத்தில் இணைந்து கொள்ள விரும்புகிறது ஆனால் 'மன்ரிற்ஸ்' ஒப்பந்தப்படி யூரோ நாணயப் புழக்கத்திற்கு முன்னர் இருக்க வேண்டிய பொருளாதாரச் சூழல் கிறீஸ் நாட்டில் இல்லை. அதற்கான தகுதியைப் பெற்ற பின்னரே சேர்ந்து கொள்ள முடியுமென ஐரோப்பிய நாணய யூனியன் அறிவித்துள்ளது.

கடந்து மூன்று தசாப்தங்களில் உலக நாடுகள் தங்கள் பொருளாதாரத்தை உலகமயமாக்கலுக்கு இசைவாக மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு வருகிறது. சர்வதேச வர்த்தக முறையில் ஒரு சமநிலைத் தன்மையினைப் பேணவேண்டும் என்ற நோக்கில் உலகமயமாக்கலுக்கு ஏற்ற பொருளாதார அமைப்பை உள்நாட்டில் ஏற்படுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகி வருகிறது. இந்நிலையில் பெரும்பாலான சர்வதேச நாடுகள் தனித்து நின்று உலகமயமாக்கலுக்குள் புகுந்து விடாமல் பிரதேச ரீதியாக பிராந்திய பொருளாதாரக் கூட்டமைப்புக்களை ஏற்படுத்தி உலகமயமாக்கலுக்கு முகம் கொடுத்து வருகிறது. இவ்வடிப்படையில் ஐரோப்பிய யூனியனும் உலகமயமாக்கலுக்கு முகம் கொடுப்பதோடு ஏனைய நாடுகளும் கட்டில்லா வர்த்தகத்தை ஏற்படுத்தி உலகமயமாக்கலுக்கு வருவதைக் சாதகமாக்கிக் கொண்டு உலக வர்த்தகத்தில் யூரோ நாணயப் பயன்பாட்டையும் அதிகரித்து சர்வதேச வர்த்தக புழக்க நாணயமாக யூரோ நாணயத்தை நிலை நிறுத்த அடித்தளமிட்டு வருகிறது. இதற்கு உலகமயமாக்கல் எண்ணக்கரு தோன்றிய நாளிருந்தே யூரோ நாணய ஆக்கம் பற்றிய செயற்பாடுகளும் முடிக்கி விடப்பட்டிருந்ததை சான்றாகக் கூற முடியும். எவ்வாறெனினும் உலகமயமாக்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூரோ நாணயத்திற்கான கேள்வியை அதிகரிக்கக் கூடியதாகவே உள்ளது. அத்துடன் குறைந்த வட்டியில் யூரோ நாணயத்தைக் கடனாகப் பெறும் வாய்ப்பு இருப்பதும் குறைந்த வட்டியில் அதிக முதலீட்டை ஏனைய நாடுகள் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பும் உள்ளது. பணவீக்கம் குறைந்த பெறுமதி உறுதியாக்கப் பட்ட நாணயமாக யூரோ இருப்பதால் உலக நிதிச் சந்தையில் யூரோவிற்கான கேள்வி அதிகரிக்கும் வாய்ப்பே உள்ளது.

யூரோ நாணயப் பிரதேசத்தில் எந்த நாட்டுப் பொருளாதாரத்திற்கு இலகுவாக நாணயப் பெறுமதி வரையறுக்கப்படும் என்ற கேள்வி எழுகிறது? உலகின் மிகப் பெறுமதி வாய்ந்த ஜேர்மன் மார்க்கும் பிரான்சின் பிராங்கும் புழக்கத்திலிருந்து வந்த ஜேர்மனி, பிரான்ஸ், போன்ற பொருளாதார பலம் வாய்ந்த நாடுகளிற்கு ஏற்புடையதான பேரினப் பொருளாதாரக் கொள்கை, நாணயக் கொள்கை, வகுக்கப்படுமா? அல்லது மற்றும் சிறிய நாடுகளுக்காக கொள்கை வகுக்கப்படுமா என்ற பிரச்சினைகளும் எதிர் காலத்தில் ஏற்படலாம் என சந்தேகிக்கப்படுகிறது. இது இறுதியில் ஐரோப்பிய யூனியன் நாடுகளிற்கிடையே கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தி பிரிவு படக் கூடிய சந்தர்ப்பங்களும் உண்டு.

இன்று உலகில் அதிகார வல்லரசாகவும் பொருளாதாரப் பலம் வாய்ந்த நாடாகவுமுள்ள அமெரிக்காவின் டொலரை அப்புறப்படுத்திவிட்டு யூரோ அதன் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கையும் உண்டு. யூரோ நாடுகளும் சர்வதேச வர்த்தகத்தில் டொலரை ஒதுக்கி அவ்விடத்தில் யூரோவை வைக்க முயல்கின்றன. எழு உலக கைத்தொழில் நாடுகள் குழுவில் பெரும்பாலானவை யூரோ நாடுகளாகும். மேலும் ஐரோப்பிய யூனியன் நாடுகள் ஒன்று சேர்ந்திருப்பதென்பது பொருளாதார பலம் பொருந்திய நாடாக யூரோ நாடுகள் வருவதற்கான சாத்தியக்கூறுகள் உண்டு இவ்வாறு உலக வர்த்தகத்தில் யூரோ நாணயப் பிரவேசம் டொலரின் இடத்தை இரண்டாவது நிலைக்குத் தள்ளுவதோடு உலகப் பொருளாதாரப் பிரச்சினை தீர்ந்துவிடும் என்பதில்லை. யூரோ நாடாக தன்னை மாற்ற விரும்பாத பிரித்தானியா ஸ்ரேலிங் பவுண் நாணயத்தை விடவும் விரும்பவில்லை யூரோவும் எதிர்காலத்தில் டொலர் அரக்கனை வெற்றிகொண்ட இன்னொரு அரக்கனாகவும் மாற்றமடைய வாய்ப்புண்டு.



**பண்பாட்டின் பேரால் (10)**

# வெற்றி என்பது

○ முருகையன்

'டிறிங், டிறிங் டிறிங், டிறிங் '

வழக்கம் போல அப்பு தமது சாய்மனைக் கதிரையிலே சாய்ந்திருந்தார். காண்டாவனம் தொடங்கி இரண்டு நாள் தான் ஆகி இருந்தது. மத்தியானப் பார். இப்பொழுது இரண்டு மணி கூட ஆகியிருக்காது. கண்கள் திறந்திருக்கச் சிரமப்பட்டன. இமைகள் ஒன்றை ஒன்று ஈர்க்கப் பார்த்தன.

ஓ! அதற்கிடையில் அவளே வந்து விடுகிறாள். ஆம், செந்திரு தான்.

'ங் . ஆ! பிள்ளையா? வா, வா. என்ன வழமைக்கு மாறாய், இந்த மத்தியான வேளையிலே .'

ஞானியார் வியப்புடன் வரவேற்கிறார். செந்திருவின் கையிலே ஒரு சிறு பாசல். 'இந்தாருங்கோ அப்பு' நாங்கள் இண்டைக்குப் பயத்தம் பணியாரம் சுட்டநாங்கள். உங்களுக்கும் கொண்டுபோய்க் கொடுக்க வேணும் எண்டு அம்மா அவசரப் படுத்தினா. அது தான் ' செந்திரு பாசலைக் கொண்டுபோய் உள்ளறையிலே பக்குவப்படுத்தி வைத்துவிட்டு, ஞானியார் முன் வந்து அமர்ந்து கொள்கிறாள்

'அப்பு, போன தடவை நீங்கள் எதிர்களின் ஒருங்கிருப்பைப்பற்றியும் எதிர்களின் மோதலைப் பற்றியும் விளங்கப்படுத்தி விட்டீங்கள். இனி, அடுத்ததாய் இயங்கியலிலை தெரிஞ்சு கொள்ள வேண்டியது என்ன?

'எதிர்மறுப்பின் எதிர்மறுப்பு'.

செந்திரு நிமிர்ந்து உட்கார்கிறாள். 'எனக்கொரு பாட்டு நினைவுக்கு வருகுது, அப்பு'.

'பாட்டா? நல்லது தானே! நீ பாடு பிள்ளை'

'ஓ. எனக்கென்ன வெக்கம்? இங்கே இப்ப இருக்கிறது. அப்பு மாத்திரம் தானே! நான் பாடத்தான் போறென்' சிரித்துக் கொண்டே செந்திரு தொடங்குகிறாள் —

'இல்லை என்பதை இல்லை செய்யலாம்
எதிர் மறுப்பையும் எதிர் மறுக்கலாம்
முன்னர் ஓடிய திசையில் ஓடியும்
முகிலை நோக்கி நாம் உயர ஏறலாம்

'இல்லை என்பதை—

'சுற்றி ஏறிடும் பாதை ஆயினும்
தூக்கி எங்களை மேல் உயர்த்துமே
வெற்றி என்பது மேன்மை எய்திடல்
விரிந்த விண்ணிடை மேல் உலாவுதல்

'இல்லை என்பதை—

'இந்த வாறு நாம் ஏறும் ஏற்றமே
இனிய வாழ் நிலை காட்டும் மாற்றமாம்
அந்தம் முந்திய ஆதி ஆகுமோ?
அது புதியதோர் ஆதி ஆகுமே

'இல்லை என்பதை—'

செந்திரு பாடினாள் அப்பு அமைதியாக இரண்டு கண்களையும் மூடிப் பாட்டிலே ஈடுபட்டுக் கேட்டபடி சாய்ந்திருக்கிறார். புலன்களைக் குவித்து ஊன்றி எந்த விடயத்திலாவது ஒன்றிவிடும் வேளையில் இந்தமாதிரிக் கண்கள் தாமாகவே மூடிக் கொண்டு விடும் - அது ஞானியாரிடம் பிரிக்க முடியாமல் ஒன்றிப் போய் விட்ட பழக்கம்; ஏன், வழக்கமும் தான் பாட்டு முடிந்ததும் அப்புவின் இமைகள் திறந்து கொள்கின்றன.

'நல்ல பொருத்தமான பாட்டு. யார் இசை அமைச்சது கண்ணன் தானே?, அப்பு விசாரிக்கிறார்.

'ஓமோம். நல்ல பாட்டு இல்லையா அப்பு?'

'அச்சா. அதோடெ பிள்ளையுடைய குரலும் இதம் பதமாய்த்தான் இருக்கு - எதிர்மறுப்பின் எதிர்மறுப்பு என்ற கோட்பாட்டை விளங்கப்படுத்திறதுக்கு மிச்சம் தோதான சொற்பதங்கள்?



'எதிர் மறுப்பு என்றால்?'

'இல்லை செய்வது'

'உள்ள பொருள் எதையும் இல்லாமல் அழித்து ஒழித்து விட முடியாது எண்டல்லவா, விஞ்ஞான வகுப்பிலே நாங்கள் படிச்சிருக்கிறம்?

'அது மெய் தான் ஆனால் ஒரு பொருளின் இயல்புகளை நாங்கள் மாற்றலாம். பானையொன்றை எடுப்போம் ... ?

புதுப்பானையை எடுக்க வேண்டாம் - பழம்பானையை எடுங்கோ, அப்பு?

'ஏன் பிள்ளை?'

'பானையை உடைக்கத்தானே போறீங்கள்? புதுப்பானை பாவம் - சுக்கல் சுக்கலாய் உடைஞ்சு போம். பழம் பானை எண்டால் பரவாயில்லை?

பீறிட்டுக் கொண்டு வந்த சிரிப்பை, வேண்டுமென்றே, பகிடிக்காக அப்பு தம்முள்ளே புதைத்துக் கொள்கிறார், ஆனால், செந்திருவின் நகைச் சுவையை அவர் எவ்வளவு நயந்தார் என்பதை அவருடைய முகம் காட்டிக் கொடுத்து விடுகிறது.

'சரி பழம்பானையை எடுப்போம்; உடைப்போம். உடைந்த சல்லிகள் எல்லாவற்றையும் கூட்டி அள்ளி உரலிலே போடுவோம். உலக்கையை எடுத்துக் கணைப் பக்கத்தாலே இடி இடி என்று இடிப்போம்; இப்ப, பானை எங்கே?

'பானை இல்லை'

'ஓம் உரலுக்குள்ளே இருக்கிறது?'

'அது வெறும் தூள். சுட்ட மண் பொடி; காடுடைய சுடலைப் பொடியைப் போலே!'

அப்புவின் விளக்க முயற்சி ஓர் அடி பாய்ந்தால், செந்திருவின் விளக்கப் பேறு ஒன்பதடி பாய்கிறது. ஞானியாருக்குப் பரம சந்தோசம். அவர் சொல்லுகிறார்.

'விளங்குது தானே; 'பானை' என்று பெயர் சொல்லக் கூடிய அந்தப் பண்டம் இப்பொழுதில்லை. ஆக்கப்படு பொருள் இல்லை. ஆனால் அதனை ஆக்கிய முதற் காரணப் பொருள் - அதாவது மண் - இப்பொழுதும் இருக்கிறது. பானை என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயர் சொல்லும் பொழுது அதன் வடிவமும் பயனும் முதன்மை பெறுகின்றன. உடைந்த பிறகு, முந்தி இருந்த உருவம் இல்லாமற் போகிறது. உருவம் கெட்ட பிறகு, அந்தச் சுட்ட மண் பொடிக் குவியலை வைத்துக் கொண்டு, அதை அடுப்பில் ஏற்றி வெந்நீர் வைக்க முடியாது. அரிசி போட்டுச் சோறு காய்ச்ச முடியாது. பொங்கலை இறக்கிப் பரிமாறி விருந்து வைக்க முடியாது. பானையினாலே முன்பு பெற்ற பலனை, சுடுமண் பொடிக் குவியலிலிருந்து நாங்கள் பெற முடியாது'

'பானை இல்லையாய் விட்டது. அப்பு; ஆக்கப்பட்டிருந்த பொருள் அழிஞ்சு போச்சு; ஆனால், பானையை ஆக்கிறதுக்கு முதற்காரணமாய் இருந்த திரவியம், அந்த 'மற்றீரியல்' இன்னும் இருக்கு அதைத்தானே சொல்ல வருறியள், அப்பு?'

'ஓம் பிள்ளை விஞ்ஞானத்திலே வருற 'சற்காரிய வாதம்' இது தான்.'

'சற்காரிய வாதம் எண்டால்?'

'சடப்பொருளை ஆக்கவும் முடியாது; அழிக்கவும் முடியாது என்ற பவுதிகவியல் விதி;

'ஆனால், அணுச்சரு விஞ்ஞான வளர்ச்சிக்குப் பிறகும் அந்தச் சற்காரியவாத விதி உண்மையா அப்பு?'

'ஒரு சின்னத் திருத்தம் செய்ய வேண்டி வந்திட்டுது.'

'என்ன திருத்தம்? திருத்தின பிறகு, அந்த விதி என்ன சொல்லுது?'

'சடப்பொருளை ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது. ஆனால், சடத்தைச் சக்தியாக மாற்றலாம். திருத்தம் செய்யப்பட்ட நிலையிலே பவுதிகவியற் சற்காரிய விதி பெற்ற புது வடிவம் இது தான் பிள்ளை'

'சரி, அப்பு. நாங்கள் பொடிப்பட்ட பானையடிக்குத் திரும்பி வருவம்;'

'பானை அடைந்த உடைவு ஒரு விதமான எதிர்மறுப்புத் தான்; 'இல்லையாக்கும்' வேலை தான். பானையுடைய வடிவமைப்பையும் பயன்பாட்டையும் இல்லாமற் செய்து போட்டம். ஆனால் இது ஓர் உருக்குலைவு நடவடிக்கையே தவிர ஆக்க பூர்வமான எதிர்மறுப்பு அல்ல, அதாவது இயங்கியல் எதிர் மறுப்பு அல்ல.'



'இயங்கியல் எதிர்மறுப்பு எப்படி இருக்கும்?'

'ஒரு புளியங்கொட்டையை எடுத்து நிலத்திலே புதைப்பம்'

'ஓம்; நான் புதைச்சுப் பாத்திருக்கிறேன். தண்ணியும் விட்டுவிட்டு ஒவ்வொரு நாளும் அவதானிச்சிருக்கிறேன். புளியங் கண்டு முளைச்சு வந்தது. நான் அதைப் பிடுங்கிப்போட்டேன்; பிடுங்கிப் பாத்தால், முந்தி இருந்த கொட்டையைக் காணேல்லை.' செந்திரு தொடர்கிறாள்.

'இது இயங்கியல் எதிர்மறுப்புக்கு ஒரு நல்ல எடுத்துக் காட்டு புளியங்கொட்டை கொட்டை ஆக இப்போது இல்லை. அது செடியாய் மாறிவிட்டுது. புளியங்கொட்டையிலிருந்த சில அம்சங்கள் இப்பொழுது இல்லை. அதினுடைய புறத்தோல், வயிரத்தன்மை எல்லாம் இப்பொழுது இல்லை. அவை மறைந்து விட்டன. பழையன கழிதல் என்று இதைச் சொல்லலாம்.'

அப்பு விட்ட இடத்திலிருந்து செந்திரு தொடங்குகிறாள்: 'புதிய அம்சங்கள் பல புகுந்து விட்டன முதலிலே இளம்பச்சை நிறத்தில் இருந்த தளிர்கள், பிறகு கரும்பச்சையாக மாறத் தொடங்குகின்றன. செடி மேல் நோக்கி உயருது.'

'பழையன கழிதலும் புதியன புகுதலும் வழு அல.'

'அவை தான் இயங்கியல் எதிர்மறுப்புகளின் பெறுபேறு.'

'மெய் தான், பிள்ளை. இதை நாங்கள் இப்படிச் சித்திரிக் கலாம். அதாவது படமாக்கலாம்' அப்பு ஒரு தாளை எடுத்து விளக்கப்படமொன்றை வரைந்து காட்டுகிறார்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இயங்கியல் எதிர் மறுப்பு | = | ஒரு நிலைமை | − | சில பழைய அம்சங்கள் | + | சில புதிய அம்சங்கள் |

இந்த எதிர்மறுப்பின் இறுதிப் பலன் ஒரு புதிய நிலைமை எண்ணுக்கணக்கில்லாத எதிர்மறுப்புகளின் திரண்ட விளைவாகத் தான் புளியங்கொட்டை புளிய மரமாய் வளர்கிறது. அதாவது, எதிர்மறுப்பின் எதிர்மறுப்பின் எதிர்மறுப்பின் எதிர்மறுப் பின் ...... எதிர்மறுப்பின் எதிர்மறுப்பாகத்தான் வளர்ச்சி களும் அபிவிருத்திகளும் மேம்பாடுகளும் பரிணாமங்களும் நடந்தேறுகின்றன. இது ஒரு மிக நீண்ட தொடர். மனிதகுல வரலாறு கூட இப்படிப்பட்ட ஒரு நெடுந்தொடர்தான்.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்துரு இடைமறிக்கிறாள் 'அப்பு' பொறுங்கோ, பொறுங்கோ பரிணாமம் எண்டு சொன்னீங்களே - அது தானே கூர்ப்பு?'

'ஓமோம், அமீபா' கிளாமிடமோனஸ் போன்ற ஒற்றை உயிரணுக்களிலேயிருந்து நாகரிகம் பெற்ற நவீன மனிசர் வரை நேரிட்ட மாற்றங்களெல்லாம் எதிர்மறுப்புகளின் எதிர்மறுப்புகள் தான்.'

'இந்த இடத்திலே எனக்கொரு சின்ன ஐமிச்சம்; ஒரு சின்னச் சங்கடம்.' இது செந்துருவின் இடைமறிப்பு:

'ஏன், என்ன ஐமிச்சம்? என்ன சங்கடம்?'

'முதலிலே ஒரு நிலைமை இருக்கு. அதுக்கு ஒரு எதிர் மறுப்பு வருகுது. பிறகு அந்த எதிர்மறுப்புக்கு ஒரு இரண்டாவது எதிர்மறுப்பு. எதிர்மறுப்பை எதிர்மறுத்தால், மாற்றமே இருக்காதே! மாற்றம் இல்லாவிட்டால், என்ன முன்னேற்றம், என்ன வளர்ச்சி, என்ன அபிவிருத்தி, என்ன மேம்பாடு, என்ன கூர்ப்பு? வேப்ப மரக்கிளையிலெ ஊஞ்சல் கட்டி நாங்கள் ஆடிறம். முன்னும் பின்னுமாக நாங்கள் ஆடிக் கொண்டிருக்கிறம். எவ்வளவு நேரம் தான் ஆடினாலும் வேப்பமரத்தடியை விட்டு அஞ்சாறு யார் தூரமாவது முன்னுக்குப் போக ஏலாமல் இருக்கே!'

'பிள்ளை, நீ பொருத்தமில்லாத ஒரு 'மொடெலை' எடுத்துப்போட்டாய்; ஊஞ்சலிலே ஏறி ஆடத் தொடங்கிவிட்டாய்; அது தான் இந்தச் சங்கடம்'.

'அப்ப, பொருத்தமான மொடெல் என்ன? நீங்களே சொல்லுங்கோவென், அப்பு'

'மலையடிவாரத்திலே நாங்கள் நிற்கிறம். நியாயமான உயரத்திலே ஒரு தேயிலைத் தொழிற்சாலை. அங்கே நாங்கள் போக வேணும். போவமா?'

'சரி போவம்'.

'தொழிற்சாலை சரி கிழக்கிலே தான் இருக்கு - அதுக்குப் போகிற தெரு இது தான். தெருவழியெ பயணிப்பம்'.

'இந்தத் தெரு வடக்கு நோக்கியெல்லோ போகுது அப்பு?'

'மலை நாட்டிலே அப்பிடித்தானே பிள்ளை! வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு, தெற்கு, மேற்கு, வடக்கு, மேற்கு, வடக்கு, கிழக்கு, கிழக்கு, கிழக்கு, வடக்கு, கிழக்கு கிழக்கு



கிழக்கு எண்டு இப்பிடி மாறி மாறி வளைஞ்சு கொண்டே தான் மலைநாட்டுப் பாதைகள் போகும். மலையிலே ஏறுற பொழுது ஒரு தருணத்திலே வடக்கு நோக்கிப் போன நாங்கள் வேறொரு நேரத்திலெ தெற்கு நோக்கியும் போக வேண்டி வரும். மலை நாட்டுத் தெருக்கள் திசையை அடிக்கடி மாற்றி மாற்றிக் கொண்டு போனாலும், கடைசியிலே கூட்டுமொத்தமாய்ப் பாக்கிற பொழுது, எங்களை மேலே மேலே உயரக் கொண்டு போகும் அல்லது கீழே கீழே இறக்கிக் கொண்டு வரும். ஒன்றில் நாங்கள் மலையடிவாரத்திலிருந்து (ஏறி) தொழிற்சாலைக்குப் போய்ச் சேரலாம். அல்லது திரும்பி இறங்கி மலையடிவாரத்துக்கு வரலாம். இந்தப் பயணத்திலே ஒரு தருணத்திலே பயணஞ் செய்த திசைக்கு எதிரானதொரு திசையிலே மற்றொரு தருணத்திலே நாங்கள் பயணஞ் செய்யிறம் அல்லவா? அது ஓர் எதிர்மறுப்புச் இப்படிப்பட்ட பலதருணங்களிலெ எதிர்மறுப்புகளின் எதிர்மறுப்புகளை நாங்கள் காணலாம். அந்த எதிர்மறுப்புகள் பயனில்லாத வெறும் ஊசலாட்டமாக ஒரே இடத்திலே தேங்கி நிற்கிறதில்லை, இயங்கியல் வழிப்பட்ட ஏற்றங்களையும் இறக்கங்களையும் நாங்கள் இந்தவிதமாக எண்ணிப்பார்க்கலாம்?

'அப்படியானால், சமுதாய அரசியல் வரலாறுகளும் இப்படியான இயங்கியற் போக்கைக் கொண்டவை தானா!'

'ஓமோம்'

'ஏன், வரலாற்றிலே முன்னேற்றங்கள் மட்டும் தானா இடம் பெறுகின்றன? பின்னிறக்கங்களும் இருக்குத்தானே?

'பின்னிறக்கங்களும் நேர்வதுண்டு தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால், நமக்கு மிக நெருக்கமாக உள்ள, நாங்கள் மிகவும் நன்றாக அறிந்த, இந்தப் பூமியையும் இதிலே தோன்றிக் கூர்ப்படைந்து மேம்பட்டு வந்த உயிரினங்களையும், மனிதர்களையும், அவர்களுடைய அறிவியல், உணர்வியல், கலையியல், தொழில் நுட்பவியல், பண்பாட்டியல் முதிர்ச்சிகளையும் இவற்றினால் ஈட்டப்பட்ட சாதனையையும் எடுத்து நோக்குகிற பொழுது, நெடியதொரு கால நீட்சியை உள்ளடக்கியதொரு கணிப்பீட்டில் நடுநிலை நின்று பார்க்கும் பொழுது, மொத்தத்தில் நாம் கண்டுள்ளது முன்னேற்றம் என்று தானே பிள்ளை சொல்ல வேணும்!'

'ஏன் அப்படிச் சொல்லுறியள்?'

'ஏன் என்றால், பிள்ளை, எவ்வளவு துன்ப துயரங்களிலெ ஆழ்ந்தாலும், வருந்தினாலும், நைந்தாலும், நொந்தாலும், நாம் ஒவ்வொருவரும் தொடர்ந்து வாழவேணும் என்று தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பிறம். அது இயலாதென்றாலும் எங்களுடைய வழித் தோன்றல்கள் என்றாலும் சிறப்பாக வாழவேணும் என்று விரும்பிறம். இந்த விருப்பம், இந்த வேட்கை எல்லா உயிரினங்களிடமும் இயற்கையாக இருக்கிறதே! உயிரினங்கள் முழுவதற்கும் பொதுவுடைமையாகவும் பலர்தர்களுக்குச் சிறப்புடைமையாகவும் உள்ள இந்த வேட்கைக்கு அடியில் ஏதோ ஓர் உயிரூக்கம் இருக்கிறது என்பதை மறுக்க என்னால் முடியவில்லை. அதனாலெ தான் சொல்லறென் — மனிதகுல வரலாறு ஒரு வெற்றிக் காவியம்; வீழ்ச்சியை நோக்கிய அவலக் கூத்தல்ல; வெறும் அபத்த நாடகமும் அல்ல,

'எனக்கு ஆச்சரியமாய் இருக்கு அப்பு

'ஏன்?'

'உங்களுடைய வயதை எட்டிப்பிடிச்ச ஆட்கள் இப்படியெல்லாம் கருதிறது குறைவு. கருதினாலும் அதை வெளிவெளியாகச் சொல்லமாட்டினம்'

'அதுவும் ஒரு வகைப் பாசாங்கு தான்'

'எனக்குச் சில வசனங்கள் நினைவுக்கு வருகுது?

'சொல்லு, பிள்ளை,.

'பாரதியார் எழுதின வசனங்கள்'

'சொல்லு பிள்ளை'

'இவ்வுலகம் இனியது. இதில் உள்ள வான் இனிமையுடைத்து. காற்றும் இனிது.

தீ இனிது, நீர் இனிது. நிலம் இனிது —
மனிதர் மிகவும் இனியர்;

ஆண் நன்று - பெண் நன்று
குழந்தை இன்பம்,
இளமை இனிது,'

'மிச்சம் நான் சொல்லுறென்' என்கிறார் அப்பு அவர் சொல்லுகிறார் —

'முதுமை நன்று
உயிர் நன்று - சாதல் நன்று'
செந்திரு சொல்லுகிறாள் —
'வாழ்தலும் நன்று, நான் சென்று வருகிறேன்.'

இதுவரை மூடி இருந்த தம் கண்களைத் திறந்து பார்க்கிறார் அப்பு. செந்திருவைக் காணவில்லை. அவள் தெருவிலே — சயிக்கிளில்.





# யுத்தமா, வர்த்தகமா, விளையாட்டா, சூதாட்டமா?

உண்மையில் விளையாட்டிற்கும் அரசியலுக்கும் தொடர்பில்லையா? பண்டைய கிரேக்க வீரனுக்கு தரப்பட்ட விருது வெறும் ஆலிவ் இலை கிரீடம்தான். இன்றைய ஒலிம்பிக் வீரனுக்கு விருது, விளம்பரத்திற்காக பன்னாட்டு நிறுவனம் தரும் சில மில்லியன் டாலர்கள். டாலரும், இலையும் ஒன்றுதானா?

முன்பு, கிரிக்கெட் போட்டிகளில் இந்தியா ஆடுவதையே காண முடியாத நீங்கள், இன்று எந்த நாடு ஆடினாலும் காண முடியும். உலகமயமாக்கமும், அறிவியல் தொழில்நுட்பப் புரட்சியும் அதை சாத்தியமாக்கியது. விளையாட்டில் மட்டும் புழங்கும் மூலதனம், பல மூன்றாம் உலக நாடுகளின் தேசிய வருமானத்தை விட அதிகம். சர்வதேச கால்பந்துக் கழகம்தான் உலகின் மிகப் பெரும் பன்னாட்டு நிறுவனம், பில்கேட்சின் நிறுவனம் அல்ல? விளையாட்டின் இத்தகைய மாபெரும் வருமானம் ஆப்பிரிக்க பஞ்சத்தைப் போக்குவதற்கும், ஆசியாவின் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்தவும் தான் பயன்படுகிறதா? இல்லை, ஏழை நாடுகளைக் கொள்ளையிடவும், ஆதிக்கம் செய்யவும் பயன்படுகிறதா? மூலதனம், சந்தை, விளம்பரம், பணம் இவற்றை உருவிவிட்டு எந்த விளையாட்டைக் காட்டமுடியும்! அல்லது ஆட முடியும்? முடியாதென்றால் அதன் காரணம் அரசியல். ஆம். அரசியல் கலப்பற்ற தூய விளையாட்டு எதுவும் இன்று கிடையாது. சாத்தியமும் இல்லை.

இதுபோக, ஏழை நாடுகளுக்கிடையே நடக்கும் போட்டிகளும் தேசிய வெறியால் கவ்வப்பட்டிருக்கிறது. அவை பொய்யான உணர்ச்சியில் மக்களை மூழ்கடித்து ஆள்பவருக்கு பயன்படுகிறது. இருப்பினும் விளையாட்டில் நாம் கண்ட சமூக நிலைமைகள் அனைத்தும், பரபரப்பை ஏற்படுத்தி, சந்தையை அதிகரித்து, பன்னாட்டு நிறுவனங்கள் கொள்ளையிடவே முக்கியமாக பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடிக் கணக்கான மக்களை ஒற்றுமைப்படுத்துவது மட்டுமல்ல. கோடிகள் கொட்டும் கற்பக விருட்சமாகவும் கிரிக்கெட் இருக்கிறது. அதுதான் கிரிக்கெட்டின் வர்த்தக அரசியல். அதை நடத்துபவர்கள், ஆடுபவர்கள், விளம்பரதாரர்கள், தொலைக்காட்சிகள், நிறுவனங்கள் ... இவர்கள் சம்பாதிப்பது ஒரு ஏழை நாட்டின் பட்ஜெட்டை விட அதிகம்.

நாடுகளில் கிரிக்கெட் சங்கங்களின் தலைமைப் பொறுப்பிலுள்ளவர்கள். ஆட்ட விதிகளைத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. சந்தையின் விதிகளைத் தெரிந்திருப்பதுதான் அவசியம். அதற்கேற்ப பல முதலாளிகள், ஓய்வு பெற்ற உயர் அதிகாரிகள், இன்னபிற மேட்டுக் குடியினர் தான் கிரிக்கெட் தொழிலைச் செவ்வனே நடத்துகின்றனர். உலகக் கோப்பை, ஆசியக் கோப்பை, ஆஸ்திரேலியக் கோப்பை, மினி உலகக் கோப்பை என இடைவிடாமல் நடத்துகின்றனர். ஒவ்வொரு போட்டியையும் ஒரு பன்னாட்டு நிறுவனம் நடத்துகின்றது. வீரரின் ஆடை முதல், மைதான, தொலைக்காட்சி விளம்பரங்கள், நேரடி ஒளிபரப்பு உரிமை வரை பல நூறு கோடிகள் புரளும் வர்த்தகம் நடைபெறுகிறது.

90 - களில் வந்த பெப்சியும், கோக்கும் தங்களது விளம்பர நிறுவனச் செலவுகளில் பெரும் பங்கை கிரிக்கெட்டிற்கு ஒதுக்கியிருக்கின்றன என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

இப்போது சொல்லுங்கள். கிரிக்கெட்டிற்கு காட்டப்படும் அதீத பிரபலம் எதற்காக? ஒரு ஆரோக்கியமான சமூகத்திற்கு விளையாட்டும், உடற்பயிற்சியும் அவசியம். மனித குல நாகரீக முன்னேற்றத்தில் அதற்கோர் இடமுண்டு. எனில் சில நாடுகள் மட்டும் விளையாடும் கிரிக்கெட் நமது மக்களுக்கு எதைத் தந்தது? சீண்டுவாரில்லாமல் ஏனைய விளையாட்டுக்கள் ஒதுக்கப்பட்டதுதான் ஒரே பலன். கிரிக்கெட்டில் புரளும் பணத்தில் நூறில் ஒரு பங்கு ஒதுக்கினால் கூட ஏனைய துறைகள் வளரும். விளையாடும் பழக்கமும் மக்களிடம் அதிகரிக்கும். ஆனால் கிரிக்கெட்டின் வளர்ச்சி ஒரு சந்தையின் வளர்ச்சிதான், கேளிக்கைக்கான ஒரு நுகர் பொருள்தான்.

சங்கர சாய்பாப மடங்களில் வருமான வரி சோதனை கிடையாது என்பது போல் கிரிக்கெட் வீரர்களுக்கும் இல்லை. தேசிய நாயகர்கள்ல்லவா, சும்மாவா? பிடிக்கும் பந்தைவிடப் பிடிக்காத பந்திற்கும், அடித்து ஆடுவதை விட அவுட் ஆவதற்கும், நின்று ஆடுவதை விட உடன் வெளியேறுவதற்கும் - ரேட் அதிகம். ஆம். இனிமேலும் கிரிக்கெட் ஒரு விளையாட்டல்ல. பன்னாட்டுச் சந்தையின் சூதாட்டப் பொருள் மட்டுமே.

நன்றி : புதிய கலாச்சாரம்



# குழந்தை தந்த கொடை

சித்தமழகியான்

'கூடி விளையாடு பாப்பா' குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்களின் சிறுவர் நாடகம். இதை அவர் 1978 இல் எழுதினார். இது முதலில் மேடையேறியது 1979 இல். அதன் பிறகு காலத்துக்குக் காலம் பல மேடையேற்றங்கள் நடந்தேறி விட்டன.

இந்த நாடகத்தை அரங்கச் செயற்பாட்டுக் குழு என்னும் அமைப்பு 'யுனிசெவ்' நிறுவனத்தின் ஆதரவோடு 'சிறுவர்களுக்கான உள நல மேம்பாட்டுத் திட்டம்' என்னும் திட்டத்தின் கீழ் மறுபடியும் புத்துயிருட்டித் தொடர்ச்சியாக நடத்தி வருகிறது. ஏற்கனவே 19 தடவை - இவ்வாண்டு மே அய்ந்தாம் தேதி தொடக்கம் - குடாநாட்டின் பல பகுதிகளிலும் வாழும் சிறுவர்களுக்கென இந்த நாடகம் ஆடப்பட்டு விட்டது. இன்னும் பல இடங்களிலும் நடத்திக் காட்ட வேண்டும் என்பது 'அரங்கச் செயற்பாட்டுக் குழுவின்' விருப்பமாகும்.

முன்பு நாடக விற்பன்னர் அ. தாசீசியஸ் அவர்களாலும், பின்னர் திரு. க. சிதம்பரநாதன் அவர்களாலும் நெறியாள்கை செய்யப்பட்ட 'கூடி விளையாடு பாப்பா' இப்பொழுது இளந்தலை முறையினரின் கலை எழுச்சிக்கு ஒரு குறியீடு போல விளங்கும் கே. தேவானந் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகியுள்ளது. இந்த நாடக அரங்கேற்றங்களைப் பற்றி விதந்து பேசுவதற்கு நல்ல நியாயங்கள் சில உள்ளன.

மேலோட்டமாகப் பார்க்கும் பொழுது, 'சிறுவர்களுக்கென்று பெரியவர்கள் சொல்லும் நாய், பூனை, நரி, கரடி பற்றிய ஒரு கதை தானே, இது!' என்று சிலர் நினைக்கக் கூடும். பத்தோடு பதினைந்தாக இதையும் அலட்சியமாக ஒதுக்கித் தள்ளிவிட எண்ணலாம். ஆனால் குழந்தைகளோடு குழந்தையாக, சிறுவரோடு சிறுவராக அமர்ந்திருந்து இதனைப் பார்த்து மகிழும் எவரும், இந்த மேடை நிகழ்வு வழங்கும் குதூகல உணர்வையும் கும்மாளத்தையும் ஆனந்தத்தையும் இலேசாகத் தட்டிக் கழித்து விட முடியாது. இந்தச் சிறப்பு எப்படி வந்து வாய்ந்தது, இந்த நாடகத்துக்கு?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழமையாக நாங்கள் பார்க்கும் நாடகங்களிலே, நடிகர்கள் ஆடிப்பாடி நடிக்கும் மேடை புறம்பாக ஒரு பக்கத்தில் இருக்கும். பார்வையாளர்கள் மேடையுடன் தொடர்பில்லாத மற்றொரு புறம்பான பகுதியிலே இருப்பார்கள். ஆனால் 'கூடி விளையாடு பாப்பா'வில் மேடையிலே நின்று பார்வையாளரை நோக்கி வீசப்படும் ஒரு திசைத் 'தாக்குதலாக' பேச்சுகளும் 'பாடல்களும்' ஆட்டங்களும் அமையவில்லை: மாறாக, 'மேடையாளர்களுக்கும்' பார்வையாளருக்குமிடையில் நிகழும் ஒரு கொடுக்கல் - வாங்கலாக, ஓர் அனுபவப் பரிமாறலாக, ஒரு கருத்தாடலாக, இரு - திசைப்பட்ட உணர்வுக் கலப்பொன்று இருந்தது: இது மிகவும் முக்கியமானது:

'மேடையாளர்களோடு' பார்வையாளர்களும் சேர்ந்து பாடினார்கள்; கூடி, ஆடினார்கள்; கேட்ட கேள்விகளுக்கு மறுமொழி கூடச் சொன்னார்கள். சுருக்கமாகச் சொன்னால், சிறுவர்கள் நாடகத்துடன் கலந்து போனார்கள்; அந்த மகிழ்விலே கரைந்து போனார்கள்:

இது ஒரு பெரிய சாதனை:

எட்டாத உயரத்தில் ஏறி நிற்கும் பெரியோர்கள், கட்டாயப்படுத்திப் போதனைகளை இடித்தூட்டமுயலும் இன்றைய சூழ்நிலையில், இந்த விதமான கலப்பும் கரைவும் ஒரு பெரிய சாதனை.

சிறுவர் நாடகங்களைச் சிறுவர்களைக் கொண்டே, அவர்களை மாத்திரம் வைத்தே கூடத் தயாரிக்கலாம் அது ஒரு முறை: ஆனால் இந்த நாடகத்திலே, நாயாகவும், பூனையாகவும், சேவலாகவும், ஆடாகவும், பன்றியாகவும், நரியாகவும், குரங்காகவும், கரடியாகவும், மனிதனாகவும் வேடமிட்டு நடிக்கவர்கள் சிறுவர்கள் அல்ல; பெரியவர்கள் தான்: ஆனால், இவர்களிற் பலர், நிகழ்ச்சித் தொடக்கத்துக்குச் சற்று முன்பே சபையில் இருந்த சிறுவர்களுடன் சேர்ந்து: அமர்ந்து பழகி, அளவளாவி விளையாடி அந்தக் குழந்தைகளுக்கு இருந்திருக்கக் கூடிய அகத் தடைகளை இளக்கி இசைவாக்கம் செய்து கொண்டனர். இசைக் கருவிகளைச் சுருதி கூட்டுவது போன்ற இந்த முன்னாயத்த முயற்சிகள் மிகவும் நாசூக்காக மேற்கொள்ளப்பட்டமை, 'கூடி விளையாடு பாப்பா' வின் வெற்றிக்குப் பெரிதும் துணை நின்றது என்று சொல்ல வேண்டும்.



எளிமையான காட்சியமைப்பு, வேடிக்கையான வேட உடைகள், உயிர்ப்பும் தெளிவும் நிரம்பிய இசை, சிக்கலில்லாத நேரடியான பேச்சு முறை - இவை யாவும் சேர்ந்து தயாரிப்பின் சிறப்புக்குப் பங்களிப்புச் செய்தன.

எல்லாம் சரி. இந்த அரங்கேற்ற உத்திகளாலும் ஆற்றுகையாலும் எழுத்தாளர் குழந்தை அவர்களும் நெறியாளர் தேவானந்தும், ஏனைய கலைஞர்களும் எதனை உணர்த்த முயன்றனர்? எதனை உணர்த்தி வைத்தனர்? சிறுவர் உளநல மேம்பாட்டுக்கு இந்த நாடகம் எந்த வகையில் உதவி செய்கிறது? ஒரு நல்ல மாலை வேளையிலே அல்லது காலை வேளையிலே, பல சிறுவர்களையும் சில பெரியவர்களையும் மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்கது. அந்த அளவிலே நின்றிருந்தாற்கூட அது பெரிய காரியம் தான்.

ஆனால், அவ்வளவில் நிற்கவில்லை; அதற்கு அப்பாலும் சென்றது — 'கூடி விளையாடு பாப்பா': எப்படி? கந்தன் என்ற கமக்காரன் ஒரு நாயையும் பூனையையும் ஆட்டையும் பன்றியையும் வளர்க்கிறான். இவை எல்லாம் வீட்டு மிருகங்கள்: இவற்றுடன் ஒரு சேவலும் இருக்கிறது. இவற்றைத் தவிர நரி, குரங்கு, கரடி மூன்றும் காட்டு மிருகங்கள்.

இவற்றிடையே சிறு சிறு முரண்டுகளும் குழப்படிகளும் தோன்றுகின்றன. இவற்றை மூலதனமாக வைத்துத் தான் 'நாடகம்' தோற்றுவிக்கப்படுகிறது.

கந்தன் வீட்டில் இல்லாத வேளை: தாங்கள் காற்று, வெயில் மழைக்கு ஒதுங்கி இருக்க ஒரு வீடு தேவை என்று கருதி, சுயமுயற்சியினாலே பன்றியும் ஆடும் சிறு வீட்டைக் கட்டி முடிக்கின்றன. ஆனால், நாயும் பூனையும் சேவலும் இந்த முயற்சியில் ஒத்துழைக்கவில்லை.

பன்றியும் ஆடும் தம்முடைய சொந்த வீட்டிலே வசதியாக வசிக்கின்றன. காற்றும் மழையும் கடுமையாய்ப் பிடித்துக் கொள்ள, நாயும் பூனையும் இரந்து மன்றாடிக் கேட்டு அந்தச் சிறு வீட்டினுள்ளே மழைக் குளிருக்கு ஒண்டிக் கொள்ளுகின்றன: சேவல் பெருமை பிடித்த பிராணி, தான் கூவுகிற படியாலே தான் பொழுதே விடிகிறதாக அது நினைக்கிறது. வீட்டுக் கூரையிலே உயரத்தில் இருந்தாலும் நடுங்கும் குளிரையும் மழையையும் தாங்க முடியாமல் இறங்கி வந்து மன்னிப்புக் கேட்டு ஏனைய விலங்குகளோடு 'கூடி விளையாட' அதன் கர்வம் விடவில்லை கடைசியில் சேவல் கூட தன் கர்வத்தை விட்டுக் கொடுத்து மற்ற விலங்குகளுடன் சேர்ந்து கொள்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குப் போன குரங்கும் நரியும் திரும்பி வருகின்றன; நரி சேவலைப் பிடித்துத் தின்ன முயலுகின்றது. கடைசியில் நரியின் கபடத்தனம் அம்பலமாகிறது என்றாலும் பெரும்பான்மைக் கருத்திணக்கத்தினால், நரிக்குக் கூட மன்னிப்புக் கிடைக்கிறது

எல்லா விலங்குகளும் கந்தனும் சேர்ந்து, விருந்து சமைத்துச் சாப்பிடுகிறார்கள்; ஆடிப்பாடுகிறார்கள்.

இப்படி ஒரு கதையோட்டத்தை வைத்துக் கொண்டு கூட்டுழைப்பின் நன்மை, சுயமுயற்சியின் பெருமை, கர்வம், பொறாமை, தன்னலம், கபடத்தனம் என்பவற்றினால் வரும் கெடுதி, பெரும்பான்மைக் கருத்திணக்கம் தரும் வலிமை அமைதி ஆகியன பற்றிய ஆரோக்கியமான சில மன அசைவுகள், நுட்பமும் சாதுரியமும் இணைந்த வகையிலே கலை நுணுக்கத்துடன், விளையாட்டு விளையாட்டாக உணர்த்தப்படுகின்றன.

பாரிய சிவதனுசை இராமன் ஒரு பூமாலையைத் தூக்குவது போல இலாவகமாக எடுத்தானாம். வாங்கச் செயற்பாட்டுக் குழு கிட்டத்தட்ட அதைத்தான் இப்பொழுது அடிக்கடி செய்து வருகிறது 'குழந்தை' கொடுத்து வைத்தவர். அவர் தந்த பெருங் கொடை, இந்த நாடகம்.


## நியூ ஹறி ரெயிலறிங் & வீடியோ

ஆண்களுக்கான ஆடைகள் நவீன முறையிலும், உரிய நேரத்திலும் தைத்துக் கொடுக்கும் அதிசிறந்த ஸ்தாபனம்.

பழைய புதிய வீடியோ படக் கொப்பிகளும் வாடகைக்கு பெற்றுக்கொள்ளலாம். வாடிக்கையாளருக்கு விசேட சலுகை

652, நாவலர் வீதி, அரியாலை.

(சத்தியாஸ் ஸ்ரூடியோ அருகாமை)

## ரங்கன் இசைக்கருவி திருத்தகம்

சகல விதமான இசைக்கருவிகள்

● திருத்தவும் ● வாங்கவும்

ஒரே ஸ்தாபனம்

உரிமையாளர் : செ. தனேந்திரகுமாரன் (ரங்கன்)

53, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.





## " கிளின்ரன் "

(அந்தியகாலச் சேவை)

இல. 212, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

நாம் எமது மக்களின் அந்தியகாலச் சேவைகளை, திருப்திகரமாகவும், வசதிக்கும் ஆத்ம சாந்திக்கும் அமைவாகவும் சேவை செய்து வருகிறோம்.

எமது சேவை 1935ம் ஆண்டு தொடக்கம் தொடர்ந்து கொண்டே வருகின்றது.

வாருங்கள் ! நாடுங்கள் !!

கிளை: 548, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## நியூ விதுஷா நகை மாடம்

❋ உங்கள் இளமைக்கு மீண்டும் மெருகூட்டும்

❋ கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

கிளை: ரஞ்சனா நகை மாடம்

இல. 105, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்

ச. சத்தியசீலன் (ரஞ்சன்)

## சத்தியாஸ்

❖ சிறந்த கறுப்பு வெள்ளைப் படங்கள்

❖ கலர்ப் படங்கள்

❖ போட்டோ வீடியோ

❖ சயிக்கிள் உதிரிப்பாகங்கள்

❖ அழகுசாதனப் பொருட்கள்

ஆகியவற்றுக்கு நாடவேண்டிய ஒரே ஒரு ஸ்தாபனம்

## சத்தியாஸ்

650, நாவலர் வீதி, அரியாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது
Registered as a News Paper in Sri Lanka.

விரியும் அறிவு நிலை காட்டுவீர் – அங்கு
வீழும் சிறுமைகளை ஒட்டுவீர்.

– பாரதி

இலங்கை இந்திய
இலக்கிய வெளியீடுகளுக்கும்
அறிவியல் நூல்களுக்கும்

**VASANTHAM BOOK HOUSE**

# வசந்தம்

## புத்தக நிலையம்

405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

இச்சஞ்சிகை தேசிய கலை இலக்கியப் பேரவைக்காக யாழ்ப்பாணம் 405, ஸ்ரான்லி வீதி வசந்தத்திலுள்ள சு. தணிகாசலம் அவர்களால் யாழ்ப்பாணம் 407, ஸ்ரான்லி வீதியிலுள்ள யாழ்ப்பாண அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org